# தேவகோட்டை நகராட்சி.

## <u>சாதாரணக்கூட்டம்.</u>

தேவகோட்டை நகராட்சியில் நகர்மன்ற சாதாரணக்கூட்டம் 08.07.2022–ம், தேதி வெள்ளிக்கிழமை காலை 11.00 மணிக்கு நடைபெறவுள்ளது. அவ்வமயம் கீழ்க்கண்ட பொருட்கள் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது. தாங்கள் இக்கூட்டத்தில் கலந்துகொள்ள வேண்டுமாய் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

(ஒப்பம்)கா.சுந்தரலிங்கம்

**நகர்மன்ற தலைவர்**
**தேவகோட்டை நகர்மன்றம்**

**<u>தேவகோட்டை நகர்மன்றத்தலைவர் அவர்களால் கொண்டு வரப்படும் பிரேரணை</u>**

தேவகோட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட இடங்களில் உள்ள தற்காலிக சாலையோர கடைகள் மற்றும் தினசரி மார்க்கெட்குரிய கட்டணங்கள் வசூல் செய்யும் உரிமம், துறை மூலம் வசூல் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஏற்கனவே ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர தினசரி நாளிதழில் பிரசுரம் செய்யப்பட்டதில் சிறுகுறு வியாபாரிகள் தற்போது நகராட்சியால் வசூல் செய்யும் தொகையே சரியான கட்டணமாக இருப்பதாலும் குத்தகைக்கு விடுவதால் குத்தகைதாரர் கூடுதாலக வசூல் செய்ய வாய்ப்புள்ளதால் தங்களது வாழ்வாதாரம் பாதிக்கப்படுமென தெரிவித்து குத்தகைக்கு விடும் நடவடிக்கையினை கைவிடுமாறு நகர்மன்ற தலைவர், ஆணையாளர் மற்றும் அப்போதைய வருவாய் கோட்டாட்சியர் அவர்களிடம் தங்களது கோரிக்கையினை முன்வைத்துள்ளனர். அதன்பேரில் வருவாய் கோட்டாட்சியர் அவர்களின் சமாதான கூட்டம் நடைபெற்றது. அதில் சிறுகுறு வியாபாரிகளின் நலன்கருதி வசூல் பணியினை துறை மூலமாக வசூல் செய்யலாம் என தீர்மானிக்கப்பட்டது. அதன்படி மேற்கண்ட இனங்களுக்கு தற்போது நடைமுறையில் உள்ளவாறு துறை ரீதியாக வசூல் செய்யும் நடவடிக்கையினை மன்றம் ஏற்கலாம்.

மேலும் துறை ரீதியான கட்டணம் பல வருடங்களாக உயர்வு செய்யப்படாமல் உள்ளது. தற்போது பணியில் ஈடுபடும் துறை பணியாளர்களின் ஊதிய செலவினம் மற்றும் கட்டண ரசீது அச்சடிக்கும் செலவினம் போன்றவைகள் கருத்திற்கொண்டு தற்போது வசூல் செய்யும் கட்டண விகிதங்களை கீழ்க்கண்டவாறு உயர்வு செய்து தொடர்ந்து இந்த உரிமத்திற்கு துறை ரீதியாக வசூல் செய்யும் பணி மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

| வ.எண் | தற்போது உள்ள கட்டணம் ரூ உத்தேசமாக | மாற்றம் செய்யவேண்டிய கட்டணம் ரூ |
|---|---|---|
| 1 | 10 | 20 |
| 2 | 20 | 40 |
| 3 | 30 | 50 |
| 4 | 40 | 60 |
| 5 | 50 | 80 |
| 6 | 60 | 100 |
| 7 | 70 | 120 |
| 8 | 80 | 130 |
| 9 | 90 | 140 |
| 10 | 100 | 150 |
| 11 | 120 | 170 |
| 12 | 150 | 225 |
| 13 | 200 | 300 |
| 14 | 250 | 350 |

| | | |
|---|---|---|
| 15 | 300 | 400 |
| 16 | 450 | 550 |

**பிரேரணை ஏற்றுக்கொள்ளப்பட்டது.**

**பொருள்:19**

தேவகோட்டை நகராட்சி பொது சுகாதாரப் பிரிவின் கீழ் 27 வார்டு பகுதிகளிலும் உள்ள முட்புதர்கள், செடிகள் மற்றும் மழைநீர் வடிகால்கள் கால்வாய்கள் சுத்தம் செய்ய நகர்மன்ற அனுமதியின்படி மூன்று JCB வாகனங்கள் வாடகைக்கு வழங்க விலைப்புள்ளி அறிவிப்பு செய்த வகையில் மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. வரப்பெற்ற விலைப்புள்ளிகள் விபரம்.

| வ.எண் | விபரம் | மலைமதா டிப்பர் சர்வீஸ், தேவகோட்டை | RMS எர்த் மூவர்ஸ், தளக்காவூர் | ஸ்ரீ வெற்றி விநாயகர் எர்த் மூவர்ஸ், காரைக்குடி |
|---|---|---|---|---|
| 1 | டிரைவர் படி நாள் ஒன்றுக்கு | 300/– | 400/- | 300/– |
| 2 | வாடகை ஒரு மணி நேரத்திற்கு | 850/– | 950/- | 1100/– |

மேற்காணும் விபரப்படி வரப்பெற்றுள்ள விலைப்புள்ளிகளில் குறைவான விலை விகிதங்கள் வழங்கிய நிறுவனத்தின் மூலம் பணி மேற்கொள்ள வேலை உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு–**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) குறைவான விலைவிகிதங்கள் வழங்கிய மலைமதா டிப்பர் சர்வீஸ்,
தேவகோட்டை என்ற நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்க மன்றம்அனுமதிக்கலாம்.

இ) பணியின் அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களிடம் 17.03.2022–ல் முன் அனுமதிபெற்றதை மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்:281/2022/எச்1

**தீர்மானம் 19– அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்: 20**

தேவகோட்டை நகராட்சியில் வருவாய் பிரிவின் கீழ் சொத்துவரி சீராய்வு– 2022க்கான, சொத்துவரி சுயமதிப்பீட்டு படிவம் A4 அளவில் இரண்டு பக்கம் கீழ்காணும் விபரப்படி அச்சடிக்க ஆகும் உத்தேச செலவீன தொகை ரூ.2,00,000/–த்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1 | சொத்துவரி சீராய்வு படிவம் குடியிருப்பு பயன்பாடு குடியிருப்புக்கு இளநீல நிறம் | 22000 எண்ணம் |
| 2 | சொத்துவரி சீராய்வு படிவம் வணிக பயன்பாடு இளம் சிகப்பு நிறம் இரண்டு | 4000 எண்ணம் |
| 3 | சுயநிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டிடங்களுக்கு இளம் பச்சை நிறம் | 100 எண்ணம் |
| 4 | காலிமனைகளுக்கு இளம் மஞ்சள் நிறம் | 2500 எண்ணம் |

**அலுவலகக்குறிப்பு–**

1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கும் அதற்கான செலவினத்தை நகராட்சி பொதுநிதியில் மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

3)பணியின் அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களிடம் 12.04.2022–ல் முன் அனுமதிபெற்றதை மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் 20– அனுமதிக்கப்பட்டது.</u>**

**<u>பொருள்: 21</u>**

283/2022/அ1

தேவகோட்டை நகராட்சி வருவாய் பிரிவின் கீழ் சொத்துவரி சீராய்வு – 2022க்கான, சுயமதிப்பீட்டு படிவம் கீழ்காணும் விபரப்படி அச்சடிப்புக்காக கீழ்காணும் விலைப்புள்ளிகள் வரப்பெற்று உள்ளன. குறைவான ஒப்பந்தப்புள்ளி மதிப்புகள் வழங்கிய விநாயகா பிரிண்டர்ஸ், தேவகோட்டை என்பவருக்கு வேலை உத்தரவு வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | விபரம் | விநாயகா பிரிண்டர்ஸ், தேவகோட்டை. | சூரியா பிரிண்டர்ஸ், தேவகோட்டை. |
|---|---|---|---|
| 1 | குடியிருப்புக்கு இளநீல நிறம் இரண்டு பக்கம் (ஒரு செட்) | 4.00 | 4.50 |
| 2 | வணிகத்திற்கு இளம் சிகப்பு நிறம் இரண்டு பக்கம் (ஒரு செட்) | 4.00 | 4.50 |
| 3 | சுயநிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டிடங்களுக்கு இளம் பச்சை நிறம் இரண்டு பக்கம் (ஒரு செட்) | 4.00 | 4.50 |
| 4 | காலிமனைகளுக்கு இளம் மஞ்சள் நிறம் இரண்டு பக்கம் (ஒரு செட்) | 4.00 | 4.50 |

**<u>அலுவலகக்குறிப்பு–</u>**

1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) குறைவான ஒப்பந்தப்புள்ளி மதிப்பு வழங்கிய விநாயகா பிரிண்டர்ஸ் ஒப்பந்தப்புள்ளி மதிப்பினை ஏற்று வேலை உத்தரவு வழங்கியதைமன்றம் அனுமதிக்கலாம்.

3) இதற்கான செலவின தொகையினை நகராட்சி பொதுநிதியிலிருந்துமேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

4) அவசரம் அவசியம் கருதி மன்ற அனுமதியினை எதிர்நோக்கி முன்அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் 21– அனுமதிக்கப்பட்டது.</u>**

**<u>பொருள்: 22</u>**

தேவகோட்டை நகராட்சி பொது சுகாதாரப் பிரிவின் கீழ் இயங்கி வரும் டிப்பர் லாரி வாகன எண்:TN-63–AQ-1534 – வாகனத்தின் தகுதிச் சான்று முடிவடைந்த நிலையில் தகுதிச்சான்று பெறும் பொருட்டு வாகனத்தில் உள்ள பழுதுகளை ஒட்டுநர் தெரிவித்துள்ள விபரப்படி நீக்கம் செய்து பணியின் அவசர அவசியம் கருதியும், பொதுசுகாதார நலன் கருதியும் உள்ளூர் விலைப்புள்ளி பெற்று பணி மேற்கொள்ளவும், துப்புரவு ஆய்வாளர் அவர்களின் குறிப்பின்படி அதற்காகும் உத்தேச செலவீனம் ரூ.2,00,000/– (இரண்டு இலட்சம்) மட்டும் செலவு மேற்கொண்டும், வாகனத்தின் தகுதிச்சான்று பெற மேல் நடவடிக்கை தொடர மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு–</u>**

1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) செலவீனத்தை பொதுநிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்: 889/2020/எச்1

**தீர்மானம் 22– அனுமதிக்கப்பட்டது.**

## பொருள்: 23

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்:20789/2021/UPA1, நாள்:29.03.2022–ல் தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் NULM-SUSV 2022-23–ன் கீழ் தேவகோட்டை நகராட்சியில் பதிவு பெற்ற சாலையோர வியாபாரிகள் 30 பேருக்கு தள்ளுவண்டிகள் வழங்கிட கோரி ரூ.23,94,000/– நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்ற விபரம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு–**

1) மன்றம் பதிவு செய்யலாம்.

**தீர்மானம் 23– அனுமதிக்கப்பட்டது.**

## பொருள்: 24

தேவகோட்டை நகராட்சிக்குட்பட்ட 27 வார்டுகளிலும் உள்ள தெருவிளக்குகளை தனியார் நிறுவனமான தரணி அஸோஸியேட்ஸ் நிறுவனத்தார் அவர்களால் பராமரிப்பு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அனைத்து தெருவிளக்குகளையும் LEDஆக மாற்றம் செய்ய வேண்டி நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் 08.09.2021–ந் தேதிய கடிதத்தில் தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து ரூ.275.80 இலட்சம் மதிப்பீட்டிற்கு கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. அதன்படி LED விளக்குகள் மாற்றம் செய்திட உத்தரவு வரும் வரை தெருவிளக்கு பராமரிப்பு செய்திட ஏற்கனவே பார்த்து வரும் தரணி அஸோஸியேட்ஸ் நிறுவனத்தாருக்கு மன்ற அனுமதி பெற்று 01.04.2022 முதல் 30.04.2022 வரை ஒரு மாத காலத்திற்கு பணி நீட்டிப்பு செய்யப்பட்டது. தற்போது பணி நீட்டிப்பு செய்த காலம் 30.04.2022 உடன் முடிவடைகிறது. எனவே LED விளக்குகளாக மாற்றம் செய்ய உத்தரவு வரும் வரை தற்போது பராமரிப்பு பணியினை பார்த்து வரும் தரணி அஸோஸியேட்ஸ், மதுரை நிறுவனத்தார்க்கு 01.05.2022 முதல் 31.07.2022 வரை உள்ள மூன்று மாத காலத்திற்கு பணி நீட்டிப்பு செய்திடவும் அதற்கான உத்தேச செலவீனம் ரூ.9,90,000/–த்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு–**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்காணும் பணி அத்தியாவசிய பணியாக இருப்பதால் பொதுமக்களின்நலன் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.

இ) பணிக்கான செலவீனத்தை பொதுநிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

ஈ) பணியின் அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களிடம் 26.04.2022–ல் முன் அனுமதிபெற்றதை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் 24– அனுமதிக்கப்பட்டது.**

## பொருள்: 25

தேவகோட்டை நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவின் கீழ் இயங்கி வரும் வாகனங்களின் வாகன காப்பீட்டினை புதுப்பிக்க இந்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட காப்பீட்டு நிறுவனமான யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனியிலிருந்து கேட்பு பட்டியல் வரப்பெற்றுள்ளது. அதன்படி விபரம்:–

| வ.எண் | வாகன எண் | வாகன வகை | தொகை |
|---|---|---|---|
| 1 | TN63–AR–5171 | TATA ACE | 18,989.00 |
| 2 | TN63–AR–5166 | TATA ACE | 18,989.00 |

| | | | |
|---|---|---|---|
| 3 | TN63–AQ–1536 | டிப்பர் லாரி | 33,284.00 |
| | | மொத்தம் | 71,262.00 |

மேற்காணும் விபரப்பட்டியல்படி வாகனங்களின் காப்பீடு புதுப்பிக்கவும் அதற்காகும் செலவுத்தொகை ரூ.71,262.00–ற்கு (ரூபாய் எழுபத்தி ஒராயிரத்து இரு நூற்றி அறுபத்தி இரண்டு மட்டும்) செலவு மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு–</u>

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்காணும் பணி செலவீனத்தை பொதுநிதியின் கீழ் மேற்கொள்ளமன்றம் அனுமதிக்கலாம்.

இ) யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனி மூலம் காப்பீடு புதுபிக்கமன்றம் அனுமதிக்கலாம்.

ஈ) பணியின் அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களிடம் 30.03.2022–ல் முன் அனுமதிபெற்றதை மன்றம் அனுமதிக்கலாம்.

## <u>தீர்மானம் 25– அனுமதிக்கப்பட்டது.</u>

## <u>பொருள்: 26</u>

தேவகோட்டை நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவின் கீழ் இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் விவேகா (அறக்கட்டளை) தொண்டு நிறுவனம் 45 DBC பணியாளர்களைக் கொண்டு டெங்கு கொசுப்புழு ஒழிப்பு பணிகள் மேற்கொண்டு வருகிறது. தற்போது மேற்படி நிறுவனத்தின் பணி நீடிப்பு காலம் வருகின்ற 30.04.2022 அன்றுடன் முடிவடைகிறது.

மேலும் இந்நகர் 27 வார்டு பகுதிகளிலும் டெங்கு கொசு ஒழிப்பு பணிகள், தொற்று நோய் தடுப்பு பணிகள் மேற்கொள்ளவும், டெங்கு வைரஸ் காய்ச்சல் பரவா வண்ணம் தடுப்பு பணிகள் மேற்கொள்ளவும், பணியின் அவசிய அவசரம் கருதியும் பொதுசுகாதாரம் மற்றும் நோய்த்தொற்று தடுப்பு பணி என்பதால் பொதுமக்களின் நலனை கருத்தில் கொண்டு தற்போது பணி பார்த்து வரும் விவேகா (அறக்கட்டளை) தொண்டு நிறுவனம் மூலம் இருமாத காலத்திற்கு (01.05.2022 முதல் 30.06.2022 வரை) பணி நீடிப்பு செய்து வழங்கவும், அதற்காகும் உத்தேச செலவீனம் ரூ.7,00,000/– (ரூபாய் ஏழு இலட்சம் மட்டும்) த்திற்கு மன்ற அனுமதி பெற்று செலவு மேற்கொள்ளவும் 25.04.2022–ந் தேதிய துப்புரவு ஆய்வாளர் அவர்கள் குறிப்பில் தெரிவித்துள்ளார். அதன்படி பணி மேல் நடவடிக்கை மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு–</u>

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) பணிக்காகும் செலவீனத்தை பொதுநிதியின் கீழ் மேற்கொள்ளமன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

இ)பணியின் அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களிடம் 26.04.2022–ல் முன் அனுமதிபெற்றதை மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்:1769/2020/எச்1

## <u>தீர்மானம் 26– அனுமதிக்கப்பட்டது.</u>

## <u>பொருள்: 27</u>

தேவகோட்டை நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவின் கீழ் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் மூலம் பொதுசுகாதாரப் பணிகள் மேற்கொள்ள போதுமான நிரந்தர தூய்மை பணியாளர்கள் இல்லாத நிலையில் நகராட்சி நிர்வாக ஆணையர் – சென்னை அவர்களின் 20.08.2015–ந் தேதிய நிர்வாக அனுமதியின்படி 115 தூய்மை பணியாளர்களை கொண்டு தனியார் ஒப்பந்த நிறுவனமான மதுரை மீனாட்சி திடக்கழிவு மேலாண்மை – காரைக்குடி நிறுவனத்தின் மூலம் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேற்படி ஒப்பந்த நிறுவனத்தின் ஒப்பந்த காலம் 09.12.2018–ம் தேதியுடன் முடிவடைந்த நிலையில் புதிய ஒப்பந்தப்புள்ளி கோர மாவட்ட ஆட்சியர் – சிவகங்கை அவர்களின் 2019–2020–ம் வருட தினக்கூலி ஊதிய நிர்ணயத்தின்படி 115 தூய்மை பணியாளர்களுக்கு ஊதிய கணக்கீட்டு தயார் செய்து நகராட்சி நிர்வாக ஆணையர் – சென்னை அவர்களின் நிர்வாக அனுமதிகோரி கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது.

நிர்வாக அனுமதி கிடைக்க காலதாமாதமான நிலையில் 02.10.2021–ந் தேதிய நகராட்சி நிர்வாக இயக்குநர் – சென்னை அவர்களின் கடிதத்தில் கேட்டுள்ளவாறு தமிழகம் முழுவதும் ஒரே மாதிரியான பணியாளர்களின் அளவுகோல் மற்றும் ஒரே மாதிரியான உதிய விகிதம் ஆகியவற்றின் அடிப்படையில் கருத்துரு தயார் செய்து அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மேலும் தற்போது மதுரை மீனாட்சி திடக்கழிவு மேலாண்மை – காரைக்குடி நிறுவனத்தின் பணி நீடிப்பு காலம் 30.04.2022 அன்றுடன் முடிவடையும் நிலையில் உள்ளது.

நகராட்சி நிர்வாக அனுமதிபெறும் வரையில் திடக்கழிவு மேலாண்மை பொதுசுகாதாரப் பணி பாதிக்காமல் இருக்கவும் தற்போது இந்நகர் பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொண்டு வரும் மதுரை மீனாட்சி திடக்கழிவு மேலாண்மை – காரைக்குடி நிறுவனத்திற்கு பழைய விலை விகிதத்திலேயே மேலும் மூன்று மாத காலம் 01.05.2022 முதல் 31.07.2022 வரை துப்புரவு ஆய்வாளர் அவர்களின் குறிப்பின்படியும், ஆணையாளர் அவர்களின் அனுமதியின்படியும் பணி நீடிப்பு செய்து வழங்கவும் அதற்காகும் உத்தேச செலவீனம் ரூ.45,00,000/– (நாற்பத்தைந்து இலட்சத்திற்கு)–த்திற்கு செலவு மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு–</u>**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) பணிக்காகும் செலவீனத்தை பொதுநிதியின் கீழ் மேற்கொள்ளமன்றம் அனுமதிக்கலாம்.

இ) பணியின் அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களிடம் 29.04.2022–ல் முன் அனுமதிபெற்றதை மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்:1009/2007/எச்1

## <u>தீர்மானம் 27– அனுமதிக்கப்பட்டது.</u>

## <u>பொருள்: 28</u>

தேவகோட்டை நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவின் கீழ் 30 தூய்மை பணியாளர்களைக் கொண்டு மதுரை மீனாட்சி திடக்கழிவு மேலாண்மை – காரைக்குடி நிறுவனம் மூலம் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்போது மேற்படி நிறுவனத்தின் பணிக்காலம் 30.04.2022–ந் தேதியுடன் முடிவடையும் நிலையில் உள்ளது.

நகராட்சி நிர்வாக இயக்குநர் – சென்னை அவர்களின் 02.10.2021–ந் தேதிய கடிதத்தின்படி தமிழக அரசால் மாநிலம் முழுவதும் தனியார் மய பணிகள் ஒரே மாதிரியான ஊதியம் மற்றும் அளவுகோல் என்ற அடிப்படையில் நகராட்சி நிர்வாக இயக்குநர் – சென்னை அவர்களால் கருத்துரு கோரப்பட்டு இந்நகராட்சி மூலம் அனுப்பப்பட்டுள்ளது.

அதன்படி நிர்வாக அனுமதி பெரும் வரையில் இந்நகராட்சி பகுதிகளில் பொதுசுகாதாரப் பணிகள் பாதிக்கா வண்ணம் செயல்படவும் பொதுசுகாதார அவசர அவசியம் கருதியும் மேற்படி நிறுவனத்திற்கு பழையவிலை விகிதத்திலே துப்பரவு ஆய்வாளர் அவர்களின் குறிப்பின்படியும், ஆணையாளர் அவர்களின் அனுமதியின்படியும் மேலும் மூன்று மாத காலத்திற்கு 01.05.2022 முதல் 31.07.2022 வரை பணி நீடிப்பு செய்யவும் அதற்காகும் உத்தேச செலவீனம் ரூ.10,00,000/– (பத்து இலட்சம்)–த்திற்கு செலவு மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு–</u>**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) பணிக்காகும் செலவீனத்தை பொதுநிதியின் கீழ் மேற்கொள்ளமன்றம் அனுமதிக்கலாம்.

இ) பணியின் அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களிடம் 29.04.2022–ல் முன் அனுமதிபெற்றதை மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்: 4194/2018/எச்1

**<u>தீர்மானம் 28– அனுமதிக்கப்பட்டது.</u>**

## <u>பொருள்: 29</u>

தேவகோட்டை நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவின் கீழ் இயங்கி வரும் கீழ்காணும் மூன்று TATA ACE வாகனங்களின் டயர், ட்யூப் வாங்கி மாற்றி தர வேண்டியுள்ளது. வாகனத்தின் விபரம்:–

1) TN63–BW–6719
2) TN63–BW–6798
3) TN63–AR–5166

மேற்படி வாகனத்தின் டயர்கள் தேய்மான நிலையில் உள்ளதால் அடிக்கடி பஞ்சர் ஆகிவிடுவதாலும், வாகனங்கள் அனைத்தும் உரக்கிடங்கிற்கு தேவகோட்டை ரஸ்தாவிற்கு செல்ல வேண்டியுள்ளதாலும் பொதுசுகாதார அவசர அவசியம் கருதி மூன்று வாகனங்களுக்கும் புதிய டயர்

மற்றும் ட்யூப்கள் வாங்கிடவும் அதற்காகும் உத்தேச செலவீனம் ரூ.45,000/– (நாற்பத்தி ஐந்தாயிரம்)–த்திற்கு செலவு மேற்கொள்ளவும் துப்பரவு ஆய்வாளர் அவர்கள் குறிப்பில் தெரிவித்துள்ளார். அதன்படி பணி மேல் நடவடிக்கை தொடர மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு–</u>**
அ) மன்றம் அனுமதிக்கலாம்.
ஆ) பணிக்காகும் செலவீனத்தை பொதுநிதியின் கீழ் மேற்கொள்ளமன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்: 0616/2020/எச்1

**<u>தீர்மானம் 29– அனுமதிக்கப்பட்டது.</u>**

## <u>பொருள்: 30</u>

தேவகோட்டை நகராட்சியில்சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத்திட்டம் 2021–2022–ன் கீழ் நிர்வாக அனுமதி பெறப்பட்ட கீழ்கண்ட பணிக்கு 06.05.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகள் நகர்மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதப்பீடு ரூ (இலட்சத்தில்) | ஓப்பந்ததாரர் பெயர் | விலை விகிதம் மதிப்பீட்டைவிட |
|---|---|---|---|---|
| 1 | தேவகோட்டை நகராட்சி இரவுசேரியில் கலையரங்கம் அமைத்தல் | 7.50 | 1) திரு.C.ரமேஷ் முருகன் | 1.29% குறைவு |
| | | | 2) திரு.V.கணபதி | 0.88% அதிகம் |
| 2 | தேவகோட்டை நகராட்சி ஞானநந்தகிரி நகரில் நியாயவிலைக் கட்டிடம் அமைத்தல் | 11.50 | 1) திருமதி. S. ஏலம்மாள் | 5.45% குறைவு |
| | | | 2) திரு.T.பாண்டி | 5.21% குறைவு |
| | | | 3) திரு.C.ரமேஷ் முருகன் | 3.09% குறைவு |

| | | | | |
|---|---|---|---|---|
| 3 | தேவகோட்டை நகராட்சி திண்ணஞ்செட்டி ஊரணி பிள்ளையார் கோவில் அருகில் போர்வெல் சின்டெக்ஸ் அமைத்தல் | 4.50 | 1)திரு. A. ஆரோக்கியசாமி | 0.05 % குறைவு |
| | | | 2) திருமதி. S. ஏலம்மாள் | 0.83 % அதிகம் |

<u>அலுவலக குறிப்பு: –</u>

அ) பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளில் மேற்கண்ட விபரப்படி குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

**<u>தீர்மானம் 30– அனுமதிக்கப்பட்டது.</u>**

**<u>பொருள்: 31</u>**

தேவகோட்டை நகராட்சியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத்திட்டம் **2021–2022–ன்** கீழ் நிர்வாக அனுமதி பெறப்பட்ட கீழ்கண்ட பணிக்கு **12.05.2022** அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகள் நகர்மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதப்பீடு ரூ (இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | விலை விகிதம் மதிப்பீட்டைவிட |
|---|---|---|---|---|
| 1 | தேவகோட்டை நகராட்சி தேனம்மை ஊரணி முகமதியர்பட்டிணம் தெற்கு, வடக்கு பகுதியில் படிக்கட்டு அமைத்தல் | 4.00 | 1) திரு.T.பாண்டி | 0.03% குறைவு |
| | | | 2) திரு.V.கணபதி | 2.83% அதிகம் |
| 2 | தேவகோட்டை நகராட்சி15–வது வார்டு வைத்தியலிங்கம் தெருவில் ஆழ்குழாய் கிணறு அமைத்தல் | 8.00 | 1)திரு.C.ரமேஷ் முருகன் | 0.10% குறைவு |
| | | | 2) திரு. K.காசிலிங்கம் | 3.28% அதிகம் |

<u>அலுவலக குறிப்பு: –</u>

அ) பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளில் மேற்கண்ட விபரப்படி குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

**<u>தீர்மானம் 31– அனுமதிக்கப்பட்டது.</u>**

**<u>பொருள்: 32</u>**

தேவகோட்டை நகராட்சியில் தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் NULM – SUSV - **2021–22–ன்** கீழ் நிர்வாக அனுமதி பெறப்பட்ட கீழ்கண்ட பணிக்கு **11.05.2022** அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் நகர்மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ (இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | விலை விகிதம் மதிப்வீட்டை விட |
|---|---|---|---|---|
| 1 | தேவகோட்டை நகராட்சியில் தேசிய நகர்புற வாழவாதார இயக்கம் NULM – SUSV - 2021–22–ன் திட்டத்தின் கீழ் தெருவோர வியாபாரிகளுக்கு பழங்கள், காய்கறிகள், வியாபாரம் செய்வதற்கு 9 எண்ணம் வண்டிகள் விநியோகம் செயதல், உணவு | 23.94 | 1) Dhanshith Trading Agencies, Trichy. | (–) 0.63 % குறைவு |
| | | | 2) SR Enterprises, Thuraiyur. | 18.32 % அதிகம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | வியாபாரம் செய்வதற்கு 14 எண்ணம் வண்டிகள் விநியோகம் செய்தல் மற்றும் பூ வியாபாரம் செய்வதற்கு 7 எண்ணம் வண்டிகள் விநியோகம் செய்தல். | | | |

**அலுவலக குறிப்பு: –**

அ) மன்றம் ஏற்கலாம்.

ஆ) பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளில் மேற்கண்ட விபரப்படி குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

இ) பணியின் அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களிடம் 16.05.2022–ல் முன் அனுமதிபெற்றதை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் 32– அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்: 33**

தேவகோட்டை நகராட்சிக்கு சொந்தமான 16–வது தொகுதி நகராட்சி நடுநிலைப்பள்ளி கட்டிடம் அரசு மருத்துவமனை சாலையில் அமைந்துள்ளது. அக்கட்டிடம் பராமரிப்பு செய்து பல வருடங்கள் ஆகின்றன. அப்பள்ளி ஆரம்பிக்கப்பட்டு பவளவிழா ஆண்டு வருவதை முன்னிட்டு கட்டிடங்களை பராமரிப்பு செய்வது அவசியமாகிறது. கட்டிடங்கள் ஆங்காங்கே பெயர்ந்து சுவர்களில் பெயிண்ட் இல்லாமலும் இருப்பதை சரிசெய்து சுவர்களில் பெயிண்ட் இல்லாமலும் இருப்பதை சரி செய்ய வேண்டியுள்ளது. மேலும் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் பயன்படுத்தும வகையில் கழிப்பிட வசதி மற்றும் தண்ணீர் வசதி செய்ய வேண்டியுள்ளது. எனவே மாணவர்கள் நலன் கருதி பள்ளி கட்டிடங்கள் மராமத்து செய்திடவும், கழிப்பிட வசதி, தண்ணீர் வசதி செய்திடவும் ஆகும் செலவீனம் ரூ.9.90 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு: –**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்காணும் பணிக்கான செலவீனத்தை கல்வி நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

இ) பணியின் அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களிடம் 09.05.2022–ல் முன் அனுமதிபெற்றதை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் 33– அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்: 34**

ந.க.எண்:238/2022/அ1

தேவகோட்டை நகராட்சியில் வருவாய் பிரிவின் கீழ் சொத்து வரி சீராய்வு – 2022க்கான மண்டல மதிப்புகள் விரிவு வாரியாக நகராட்சி நிர்வாக ஆணையரகம் – சென்னை அவர்களின் சுற்றிக்கை ந.க.எண்:40032/2012/ஆர்1 நாள்:01.04.2022–ன்படி இரண்டு பிரபல தமிழ் நாளிதழிலும், ஒரு பிரபல ஆங்கில நாளிதழிலும் பிரச்சுரம் செய்தவகையில் கீழ்காணும் விபரப்படி பட்டியல் செலவினை வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

1) Tricity Mirror – Madurai ஆங்கில நாளிதழ்
பில் எண்:37 நாள்: 13.04.2022 ரூ.21,318/–
2) Express Publication (Madurai) Private Ltd – தினமணி
பில் எண்:MDUTN30075667நாள்: 13.04.2022 ரூ.19,089/–
3) The Daily Thanthi - Madurai – தினத்தந்தி
பில் எண்:223MDUTN211015919நாள்: 13.04.2022 –ரூ.11,919/–

**அலுவலக குறிப்பு: –**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) விளம்பர கட்டண தொகையினை பொதுநிதியில் வழங்கிட மன்றம்அனுமதிக்கலாம்.

**தீர்மானம் 34– அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்: 35**

தேவகோட்டை நகராட்சியில் தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் National Urban Livelboods Mission (SUSV)2021–2022–ன் கீழ் சாலையோர வியாபாரிகளுக்கு ரூ.23,94,000/– த்திற்கு தள்ளுவண்டிகள் வாங்கிட ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை மாவட்ட அளவில் தினசரி நாளிதழிலில் விளம்பரம் செய்யப்பட்டதற்கு தினகரன் நாளிதழ் நிறுவனமான KAL – Publications P Ltd., நிறுவனத்திலிருந்து கீழ்காணும் விபரப்படி பட்டியல் வரப்பெற்றுள்ளது .

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | தொகை |
|---|---|---|
| 1 | KAL – Publications (P) Ltd., Bill No.3300344585 Dated 29.04.2022 | 6715.80 |
| | **Total** | **6715.80** |

மேற்காணும் விபரப்படி வரப்பெற்ற பட்டியல் தொகை 6716/–க்கு செலவீனம் மேற்கொள்ள மன்ற அனுமதி வேணடப்படுகிறது.

**அலுவலக குறிப்பு: –**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்காணும் செலவீனத்தை பொதுநிதியில் வழங்கிட மன்றம்அனுமதிக்கலாம்.

**தீர்மானம் 35– அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்: 36**

தமிழக நகர்புற உள்ளாட்சித் தேர்தல் 2022–ல் தேவகோட்டை நகராட்சி நகர் மன்ற தலைவர் பதவிக்கான மறைமுகத் தேர்தலில் நகராட்சி ஆணையாளருக்கு எதிராக திரு.கா.சுந்தரலிங்கம் மற்றும் 15 நபர்கள் மூலம் தொடரப்பட்ட வழக்கு எண்: W.P (MD) No.3682/2022 மற்றும் W.M.P (MD) No. 3201/2022 ஆகிய இரண்டு வழக்குகளுக்கு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் அரசு தரப்பில் ஆஜராகிய வகையில் நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்கள் கடிதம் ந.க.எண்:5742/2022/B4 நாள்:29.03.2022–ல் குறிப்பிட்டுள்ளபடி அரசு வழக்கறிஞர் திரு.ஆர்.சண்முகசுந்தரம் மற்றும் திரு.P.முத்துக்குமார் ஆகிய இரண்டு அரசு வழக்கறிஞர்களுக்கும் வழங்க வேண்டிய கட்டணத்தொகை ரூ.15,000+5,000 ஆக nkhj;jnjhif 20,000/– (ரூபாய் இருபதாயிரம் மட்டும்) அன்னார்களுக்கு நகராட்சி பொதுநிதியிலிருந்து வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது

**அலுவலக குறிப்பு: –**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) பணியின் அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களிடம் 06.06.2022–ல் முன் அனுமதிபெற்றதை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் 36– அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்: 37**

இந்நகராட்சி முன்னாள் நகர்மன்ற கூடுதல் அரசு வழக்கறிஞர் திரு.K.செல்லபாண்டியன் அவர்கள் முன்னாள் பணியாளர் திருமதி CT.வள்ளி அவர்களின் மகள்கள் திருமதி M.ஜான்சிராணி

மற்றும் திருமதி சு.பத்மாவதி ஆகிய இரண்டு நபர்கள் மூலம் தொடரப்பட்ட வழக்கு எண்W.P.(MD) No.799/2011-க்கான வழக்கில் மீண்டும் நீதிமன்ற அவதிப்பு வழக்காக தொடரப்பட்ட வழக்கு எண்:CONTP(MD) No.1399/2014–ல் இந்நகராட்சி சார்பாக இந்நகர் மன்ற வழக்கறிஞர் திரு.செல்லபாண்டியன் கூடுதல் அரசு வழக்கறிஞர் இவ்வழக்கு சென்னை உயர்நீதி மன்றம் மதுரை கிளையில் அரசு தரப்பில் ஆஜராகிய வகையில் அவ்வழக்குக்கான தொகையினை கோரிய வழக்கு எண்:WP (MD) No.14022/2021–ல் குறிப்பிட்டுள்ள மூன்று வழக்குகளில் ஒரு வழக்கு ஆன வழக்கு எண்:CONT P (MD) No.1399/2014–ல் ஆஜராகியதற்கான தொகை ரூ.15,000/– (பதினைந்து ஆயிரம் ரூபாய் மட்டும்) திரு.K.செல்லபாண்டியன் கூடுதல் அரசு வழக்கறிஞர்அவர்களுக்கு (முன்னாள் நகர்மன்ற வழக்கறிஞர்) தொகை ரூ.15,000/– மட்டும் இந்நகராட்சி பொதுநிதியிலிருந்து அன்னாருக்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு: –</u>**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ)பணியின் அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களிடம் 17.06.2022–ல் முன் அனுமதிபெற்றதை மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.0735/2022/பி4

**<u>தீர்மானம் 37– அனுமதிக்கப்பட்டது.</u>**

## <u>பொருள்: 38</u>

தேவகோட்டை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.18–ல் உள்ள காந்தி ரோட்டில் புதிதாக நகர்நல மைய கட்டிடம் கட்டுதல் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை மாவட்ட அளவில் தினசரி நாளிதழ் ஒன்றில் விளம்பரம் செய்யப்பட்டதற்கு தினமணி நாளிதழ் நிறுவனமான Express Publications(P) Ltd., நிறுவனத்திடமிருந்து கீழ்காணும் விபரப்படி பட்டியல் வரப்பெற்றுள்ளது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | தொகை |
|---|---|---|
| 1 | Express Publications(P) Ltd., TNI-1241222 Dated 18.05.2022 | **5090.00** |
| | மொத்தம் | **5090.00** |

மேற்காணும் விபரப்படி வரப்பெற்ற செலவீனத்தின்படி பட்டியல் தயார் செய்திட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு: –</u>**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் 38– அனுமதிக்கப்பட்டது.</u>**

## <u>பொருள்: 39</u>

தேவகோட்டை நகராட்சியில் 2021–2022–ம் நிதியாண்டில் நடைபெற்றுவரும் பல்வேறு திட்டப்பணிகளை தினத்தந்தி நாளிதழில் ஒராண்டு சாதனை மலராக விளம்பரம் வெளியிட்டதற்கு தினத்தந்தி நாளிதழ் நிறுவனத்திடம் இருந்து பட்டியல் வரப்பெற்றுள்ளது. அதன் விபரம் பின்வருமாறு.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | பட்டியல் எண் | தொகை |
|---|---|---|---|
| 1 | தினத்தந்தி | 22–23 MDU211019462 | **31661.43** |
| | | மொத்தம் | **31661.43** |

மேற்காணும் தினத்தந்தி நிறுவனத்திடம் இருந்து வரப்பெற்ற பட்டியல் தொகை ரூ.31661/–க்கு செலவீனம் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு: –</u>**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்காணும் செலவீனத்தை பொதுநிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் 39– அனுமதிக்கப்பட்டது.</u>**

## <u>பொருள்: 40</u>

தேவகோட்டை நகராட்சி ஆணையாளர் ஈப்பு வாகனம்TN63-AS-1648 வாகனத்தில் கீழ்காணும் விபரப்படி பழுது நீக்கம் செய்ய வேண்டியுள்ளது. மேலும் வாகனத்தின் பழுதுகளை சரி செய்தால் மட்டுமே தொடர்ந்து இயக்க முடியும் என ஒட்டுநர் மற்றும் குடிநீர் பணி மேற்பார்வையாளர் அவர் குறிப்பில் வரப்பெற்றுள்ளது.

1. ஆயில் சர்வீஸ் அனைத்தும்.
2. 4 வீல் கீரிஸ் பேக்கிங் (பிரேக் பெடல் மாற்றுதல்) பேரிங் உட்பட பிரேக் செக்கப்.
3. முன் கண்ணாடி மாற்றுதல் புதியது.
4. முன் விளக்கு மாற்றுதல் (Head Light)
5. 4 வீல் அலைன்மெண்ட்.
6. கிளச் பிளேட் (அசெம்பிளி மாற்றுதல்).
7. சஸ்பன்சர் வேலை. டயர் ராடு எண்டு பார்ஜாய்னிங் மாற்றுதல்.
8. டோர்களுக்கு ரப்பர்பீடிங் புதியது மாற்றுதல்.
9. வாட்டர்சர்வீஸ் மேலும் வாகனத்தின் அனைத்து பழுதுகளும்.

மேற்காணும் அனைத்து பழுதுகளையும் சரிசெய்திட உத்தேச செலவீனம் ரூ.1,00,000/–த்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு: –</u>**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்காணும் செலவீனத்தை பொதுநிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் 40– அனுமதிக்கப்பட்டது.</u>**

## <u>பொருள்:41</u>

தேவகோட்டை நகராட்சியில் **2021–2022–**ம் நிதியாண்டில் நடைபெற்று வரும் பல்வேறு திட்ட பணிகளை தினசரி நாளிதழ்களான தினகரன் நாளிதழ் மற்றும் மாலைமுரசு நாளிதழ்களில் ஓராண்டு சாதனை மலராக விளம்பரம் செய்யப்பட்டதற்கு மேற்காணும் நாளிதழ் நிறுவனங்களிலிருந்து பட்டியல் வரப்பெற்றுள்ளது. அதன் விபரம் பின்வருமாறு.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | பட்டியல் எண் | தொகை |
|---|---|---|---|
| 1 | KAL Publications | **330035**<br>**4086**<br>**08.06.2022** | **35516.24** |
| 2 | மாலைமுரசு | AD222<br>30438<br>07.06.2022 | **44100.00** |
| | | **மொத்தம்** | **79616.24** |

மேற்காணும் தினசரி நாளிதழ்களான தினகரன் மற்றும் மாலைமுரசு நாளிதழ்களிலிருந்து வரப்பெற்ற பட்டியல் தொகை ரூ.**35516/–** மற்றும் **44100/–** ஆகிய தொகைகளுக்கு செலவீனம் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு: –</u>**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்காணும் செலவீனத்தை பொதுநிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் 41– அனுமதிக்கப்பட்டது.</u>**

**<u>பொருள்:42</u>**

தேவகோட்டை நகராட்சியில் 2021–2022–ம் நிதியாண்டில் நடைபெற்று வரும் பல்வேறு திட்ட பணிகளை மாலைமலர் நாளிதழில் ஓராண்டு சாதனை மலராக விளம்பரம் வெளியிட்டதற்கு மாலைமர் நாளிதழ் நிறுவனத்திடமிருந்து பட்டியல் வரப்பெற்றுள்ளது. அதன் விபரம் பின்வருமாறு.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | பட்டியல் எண் | தொகை |
|---|---|---|---|
| 1 | மலர் பப்ளிகேஷன்ஸ் லிமிடெட் | MDU-D 22050115 Date 21.05.2022 | **12600/–** |
| | | மொத்தம் | **12600/–** |

மேற்காணும் மாலைமலர் நிறுவனத்திடமிருந்து வரப்பெற்ற பட்டியல் தொகை ரூ.12600/–க்கு செலவீனம் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு: –</u>**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்காணும் செலவீனத்தை பொதுநிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் 42– அனுமதிக்கப்பட்டது.</u>**

<u>பொருள்:43</u>

தேவகோட்டை நகராட்சியில் கல்விநிதியின் கீழ் நிர்வாக அனுமதி பெறப்பட்ட கீழ்கண்ட பணிகளுக்கு 25.05.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகள் நகர்மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| **வ. எண்** | **வேலையின் பெயர்** | **மதிப்பீட்டுத் தொகை ரூ. (இலட்சத்தில்)** | **ஒப்பந்ததாரர் பெயர்** | **விலை விகிதம் மதிப்பீட்டைவிட** |
|---|---|---|---|---|
| 1. | தேவகோட்டை நகராட்சிச் சொந்தமான 6–வது தொகுதி நகராட்சி பள்ளிக் கட்டிட மராமத்து பணி மற்றும் இதர மராமத்து பணிகள் செய்தல். | 9.50 | 1) திரு.T.பாண்டி | 0.09% குறைவு |
| | | | 2) திரு.V.கணபதி | 2.50% அதிகம் |
| 2 | தேவகோட்டை நகராட்சி பள்ளியான 9–வது தொகுதி நகராட்சி பள்ளி சமையல் | 6.00 | 1) திரு.C.ரமேஷ் முருகன் | 0.12 % குறைவு |

| | | | | |
|---|---|---|---|---|
| | அறை முன்பு ஷெட் மற்றும் நடைபாதை அமைத்து மராமத்து பணி செய்தல் பணி. | | 2)திரு.K.காசிலிங்கம் | 2.94% அதிகம் |
| 3 | தேவகோட்டை நகராட்சி பள்ளியான 9–வது தொகுதி மற்றும் 16–வது தொகுதி நகராட்சி பள்ளிகளுக்கு நவீன சுத்திகரிப்பு குடிநீர் அமைப்பு அமைத்தல் பணி. | 2.00 | 1) திரு.C.ரமேஷ் முருகன் | 0.08% குறைவு |
| | | | 2)திரு.K.காசிலிங்கம் | 1.43% அதிகம் |
| 4 | தேவகோட்டை நகராட்சி 16–வது தொகுதி நகராட்சி நடுநிலைப்பள்ளி கட்டிட பராமரிப்பு, கழிப்பிட வசதி மற்றும் தண்ணீர் வசதி செய்தல் பணி. | 9.90 | 1) திரு.C.ரமேஷ் முருகன் | 0.10% குறைவு |
| | | | 2)திரு.K.காசிலிங்கம் | 2.93% அதிகம் |

<u>அலுவலக குறிப்பு: –</u>

அ) பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளில் மேற்கண்ட விபரப்படி குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

**<u>தீர்மானம் 43– அனுமதிக்கப்பட்டது.</u>**

<u>பொருள்:44</u>

தேவகோட்டை நகராட்சியில்பொதுநிதியின் கீழ் நிர்வாக அனுமதி பெறப்பட்ட கீழ்கண்ட பணிகளுக்கு 27.05.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகள் நகர்மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. (இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | விலை விகிதம் மதிப்பீட்டைவிட |
|---|---|---|---|---|
| 1. | தேவகோட்டை நகராட்சி அண்ணாசாலை பகுதியில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் கட்டும் பணி | 5.20 | 1) திரு.K.மோசஸ் | 0.15 % குறைவு |
| | | | 2) திரு.C.ரமேஷ் முருகன் | 1.71 % அதிகம் |
| 2 | தேவகோட்டை நகராட்சி அருணகிரிபட்டிணம் கிழக்கு முத்துமாரியம்மன் கோவில் பின்புறம் சிறுபாலம் கட்டும் பணி | 5.00 | 1) திருமதி. S.ஏலம்மாள் | 0.12 % குறைவு |
| | | | 2)திரு.C.ரமேஷ் முருகன் | 4.78 % அதிகம் |
| 3 | தேவகோட்டை நகராட்சி | 2.50 | 1) திரு.K.மோசஸ் | 0.11 % குறைவு |

| | | | | |
|---|---|---|---|---|
| | சருகணி ரோடு குறுக்குத்தெருவில் சிறுபாலம் கட்டும் பணி | | | |
| | | | 2)திரு.C.ரமேஷ் முருகன் | 3.66 % அதிகம் |
| 4 | தேவகோட்டை நகராட்சி கண்டதேவி ரோடு பகுதியில் மழைநீர் வடிகால் கட்டும் பணி | 5.00 | 1) திரு.K.மோசஸ் | 0.13 % குறைவு |
| | | | 2)திரு.C.ரமேஷ் முருகன் | 5.38 % அதிகம் |

**அலுவலக குறிப்பு: –**

அ) பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளில் மேற்கண்ட விபரப்படி குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

**தீர்மானம் 44– அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்:45**

தேவகோட்டை நகராட்சியில்பாரளுமன்ற உறுப்பினர் உள்ளூர் அபிவிருத்தி திட்டம்2021–2022–ன் கீழ் நிர்வாக அனுமதி பெறப்பட்ட கீழ்கண்ட பணிகளுக்கு 31.05.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகள் நகர்மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ (இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | விலை விகிதம் மதிப்பீட்டைவிட |
|---|---|---|---|---|
| 1 | தேவகோட்டை நகராட்சி 21–வது வார்டு முத்தாத்தாள் பள்ளிக்கு சின்டெக்ஸ் தொட்டி அமைத்தல். | 3.50 | 1) திரு. A. ஆரோக்கியசாமி | 0.14% குறைவு |
| | | | 2) திருமதி. S.ஏலம்மாள் | 5.55% அதிகம் |
| 2 | தேவகோட்டை நகராட்சி 2–வது வார்டு சின்ன ஹவுசிங் போர்டில் போர் போட்டு சின்டெக்ஸ் தொட்டி அமைத்தல். | 4.50 | 1) திரு. A. ஆரோக்கியசாமி | 0.10% குறைவு |
| | | | 2) திருமதி. S.ஏலம்மாள் | 4.80% அதிகம் |

**அலுவலக குறிப்பு: –**

அ) பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளில் மேற்கண்ட விபரப்படி குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

**தீர்மானம் 45– அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்:46**

தேவகோட்டை நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவின் கீழ் திடக்கழிவு மேலாண்மை திட்டப்பணிக்கு பயன்படுத்தப்பட்டு வரும் TATA ACE TN63 AR 5166 வாகனத்தின் தகுதிச்சான்று புதுப்பிக்க வேண்டி உள்ளது. அதன்படி வாகனத்தில் உள்ள பழுதுகளை சரிசெய்து தர ஓட்டுநர் விண்ணப்பித்துள்ளார். அதனடிப்படையில் மேற்படி வாகனத்தை தகுதிச்சான்று பெறும் பொருட்டு வாகனப் பழுதுகளை நீக்கி, சாலைவரி மற்றும் பசுமை வரிகள் செலுத்தி தகுதிச்சான்று பெற துப்பரவு ஆய்வாளர் அவர்களி 02.04.2022ந் தேதிய குறிப்பின்படி உத்தேச செலவீனம்

ரூ.1,00,000/— (ஒரு இலட்சம்) ஆகும் எனவும் பொதுச்சுகாதார அவசர அவசியம் கருதி விலைப்புள்ளி பெற்று பணி மேற்கொள்ளவும் தெரிவித்துள்ளார். அதன்படி பணி மேல்நடவடிக்கை தொடர மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:—</u>**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) செலவீனத்தை பொதுநிதியில் மேற்கொள்ளலாம்.
3) பணியின் அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களிடம் 04.04.2022—ல் முன் அனுமதிபெற்றதை மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் 46— அனுமதிக்கப்பட்டது.</u>**

**<u>பொருள்:47</u>**

தேவகோட்டை நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவின் கீழ் திடக்கழிவு மேலாண்மை திட்டப்பணிக்கு பயன்படுத்தப்பட்டு வரும் TATA ACE TN63 AR 5166 வாகனத்தின் தகுதிச்சான்று பெற வாகனங்களின் பழுதுகளை சரிசெய்து தர 04.04.2022—ந் தேதிய முன் அனுமதியின்படி விலைப்புள்ளி அறிவிப்பு செய்த வகையில் மூன்று விலைப்புள்ளி விலைவிகதங்கள் வரப்பெற்றுள்ளது. வரப்பெற்ற விலைப்புள்ளிகள்.

| நிறுவனங்களின் பெயர் | பாலமுருகன் ஆட்டோ சர்வீஸ், காரைக்குடி | ஏல்.ரவி ஆட்டோ சர்வீஸ், காரைக்குடி | பிரபுக்குமார் ஆட்டோ சர்வீஸ், காரைக்குடி |
|---|---|---|---|
| மதிப்பீடு (பழுது நீக்க) | ரூ.86,500/— | ரூ.1,06,700/— | ரூ.1,00,000/— |

மேல்குறிப்பிட்ட விபரங்களின்படி வரப்பெற்ற விலைப்புள்ளி விலைவிகிதங்களில் குறைந்த விலையில் விலைப்புள்ளி வழங்கிய நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்கி பணி மேற்கொண்டு தகுதிச்சான்று பெற மேல்நடவடிக்கை தொடர மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:—</u>**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) குறைவான விலைப்புள்ளிகள் வழங்கிய பாலமுருகன் ஆட்டோ சர்வீஸ், காரைக்குடி என்பவருக்கு வேலை உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.
3) பணியின் அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களிடம் முன் அனுமதிபெற்றதை மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் 47— அனுமதிக்கப்பட்டது.</u>**

**<u>பொருள்:48</u>**

தேவகோட்டை எல்லைக்குட்பட்ட 27 வார்டு பகுதிகளிலும் கேட்பாரற்று திரியும் தெரு நாய்களால் இந்நகரின் பல்வேறு பகுதிகளில் பொதுமக்களும் குழந்தைகளும் பெரும் அவதிக்குள்ளாகின்றனர். இது தொடர்பான புகார்கள், இந்நகராட்சிக்கும் மாவட்ட நிர்வாகத்திற்கும் தொடர்ந்து வந்த வண்ணம் உள்ளது.

இந்நிலையில் 29.03.2022 அன்று சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அவர்களின் தலைமையில் நடைபெற்ற பிராணிகள் வதை தடுப்பு சங்க மேலாண்மை குழு கூட்டத்தில் புகார்களை நிவர்த்தி செய்யவும், இத்தகைய இன்னல்களிலிருந்து பொதுமக்களையும்,

குழந்தைகளையும் பாதுகாக்கும் பொருட்டு மாவட்ட ஆட்சியர் அவர்களின் உத்தரவின்படி தெரு நாய்களை பிடித்து கருத்தடை சிகிச்சை மேற்கொள்ளவும், வெறிநாய்கடி தடுப்பூசி போடவும் இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் துப்பரவு பணி மேற்பார்வையாளர்களின் மூலம் கணக்கெடுப்பு செய்யப்பட்டதில் இந்நகர் பகுதிகளில் 1437 தெரு நாய்கள் இருப்பதாக கண்டறியப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து முதல் கட்டமாக 300 தெரு நாய்களை பிடித்து கருத்தடை அறுவை சிகிச்சை மேற்க்கொள்ளவும் வெறிநாய்கடி தடுப்பூசி செலுத்தவும் விலைப்புள்ளி பெற்று பணி மேற்கொள்ளவும் அதற்காகும் உத்தேச செலவீனம் (நாய் ஒன்றுக்கு ரூ.800 வீதம் 300 x 800 = ரூ.2,40,000) ரூ.2,40,000த்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. அனுமதி பெற்று பணி மேற்கொள்ள துப்பரவு ஆய்வாளர் அவர்களின் 21.04.2022ந் தேதிய குறிப்பில் தெரிவிதுள்ளார். அதன்படி பணி மேல்நடவடிக்கை தொடர மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:–</u>

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) செலவீனத்தை பொதுநிதியில் மேற்கொள்ளலாம்.

**<u>தீர்மானம் 48– அனுமதிக்கப்பட்டது.</u>**

## <u>பொருள்:49</u>

தேவகோட்டை நகராட்சிக்குட்பட்ட புதிய வார்டு எண் – 25 நித்தியகல்யாணிபுரம் பகுதியில் 10வது தொகுதி நகராட்சி நடுநிலைப்பள்ளிக்கு புதிதாக பள்ளிக் கட்டிடம் கட்டுதல் பணி நடைபெற்று முடியும் தருவாயில் உள்ளது. விரைவில் பணி முடிவுற்று பள்ளி தொடங்கவிருக்கும் நிலையில், இப்பள்ளி வளாகத்தினை சுற்றி நான்குபுறமும் திறந்தவெளியாக இருப்பதால் பள்ளி மாணவ, மாணவியர், ஆசிரியர்கள் பாதுகாப்பு நலன் கருதியும் அந்நியர்கள் மற்றும் கால்நடைகளின் நடமாட்டம் பள்ளி வளாகத்தினுள் நிகழாமல் இருக்கவும் உடனடியாக பள்ளி வளாக பின்புறம் (மேற்கு திசை) மற்றும் வடக்கு பக்கம் சுற்றுச்சுவர் எழுப்புதல் அவசியமாகிறது. எனவே 10வது தொகுதி நகராட்சி பள்ளிக்கு புதிதாக கட்டப்பட்டு வரும் பள்ளிக்கட்டிட வளாக மேற்கு பகுதி மற்றும் வடக்கு பகுதியில் வளாக மேற்கு பகுதி மற்றும் வடக்கு பகுதியில் புதிதாக சுற்றுச்சுவர் கட்டுதல் பணிக்கு மதிப்பீடு ரூ.9,90,000/– க்கு தயார் செய்யப்பட்டு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:–</u>

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) செலவீனத்தை கல்விநிதியில் மேற்கொள்ளலாம்.

**<u>தீர்மானம் 49– அனுமதிக்கப்பட்டது.</u>**

## <u>பொருள்:50</u>

தேவகோட்டை நகராட்சிக்குட்பட்ட புதிய வார்டு எண் – 25 நித்தியகல்யாணிபுரம் பகுதியில் 10வது தொகுதி நகராட்சி நடுநிலைப்பள்ளிக்கு புதிதாக பள்ளிக் கட்டிடம் கட்டுதல் பணி நடைபெற்று முடியும் தருவாயில் உள்ளது. இப்பள்ளி கட்டிடத்தின் நான்குபுறமும் கட்டிடங்கள் ஏதுமின்றி திறந்தவெளியாக உள்ளது. விரைவில் பணி முடிவுந்து பள்ளி தொடங்கவிருக்கும் நிலையில் பள்ளி மாணவ, மாணவியர், ஆசிரியர்கள் பாதுகாப்பு நலன் கருதியும் அந்நியர்கள் மற்றும் கால்நடைகளின் நடமாட்டம் பள்ளி வளாகத்தினுள் நிகழாமல் இருக்கவும் உடனடியாக பள்ளி வளாக முன்புறம் (கிழக்கு திசை) மற்றும் தென்புறம் சுற்றுச்சுவர் எழுப்புதல் அவசியமாகிறது. எனவே 10வது தொகுதி நகராட்சி புதிய நடுநிலைப்பள்ளி

கட்டிடத்தின் முன்புறம் மற்றும் தென்புறம் புதிதாக சுற்றுச்சுவர் கட்டுதல் பணிக்கு மதிப்பீடு ரூ.9,80,000/– க்கு தயார் செய்யப்பட்டுள்ளது. மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) செலவீனத்தை கல்வி நிதியில் மேற்கொள்ளலாம்.

**தீர்மானம் 50– அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்:51**

தேவகோட்டை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் – 25 நித்தியகல்யாணிபுரம் பகுதியில் 10–வது தொகுதி நகராட்சி நடுநிலைப்பள்ளிக்கென புதிதாக பள்ளிக் கட்டிடம் கட்டுதல் பணி நடைபெற்று வருகிறது. விரைவில் பணி முடிவுற்று பயன்பாட்டிற்கு வர இருக்கும் நிலையில் தற்பொழுது நடைபெற்றுவரும் பணிக்கான மதிப்பீட்டில் சத்துணவு கூடம் கட்டுவதற்கான வழிவகை ஏதும் இல்லை. பள்ளியில் பயிலும் மாணவர்களுக்கு மதிய உணவு வழங்குதல் தமிழக அரசின் திட்டம். எனவே இப்பள்ளிக்கு சத்துணவுகூடக் கட்டிடம் கட்டுதல் அவசியமாகிறது. எனவே 10வது தொகுதி நகராட்சி பள்ளிக்கு புதிய கட்டிட வளாகத்தினுள் சத்துணவுகூடம் புதிதாக கட்டுதல் பணிக்கு மதிப்பீடு ரூ.9,00,000/– க்கு தயார் செய்யப்பட்டு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) செலவீனத்தை கல்வி நிதியில் மேற்கொள்ளலாம்.

**தீர்மானம் 51– அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்:52**

தேவகோட்டை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் – 25 நித்தியகல்யாணிபுரம் பகுதியில் 10–வது தொகுதி நகராட்சி நடுநிலைப்பள்ளிக்கென புதிதாக பள்ளிக் கட்டிடம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. இப்பணி விரைவில் முடிந்து பள்ளிக் கட்டிடம் உபயோகத்திற்கு வர இருக்கும் நிலையில், இப்பள்ளிக்கென கழிப்பறை கட்டிடம் இல்லாத நிலையில் உள்ளது. ஏறத்தாழ 80 மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் உள்ள இப்பள்ளிக்கு கழிப்பறை கட்டிடம் இல்லாவிட்டால் திறந்தவெளியில் சிறுநீர் கழிக்கும் சூழ்நிலை ஏற்படும். இது சுகாதார சீர்கேட்டை உருவாக்கும். எனவே மாணாக்கர் மற்றும் ஆசிரியர்களின் சுகாதார நலன் கருதி இப்பள்ளிக்கு புதிதாக கழிப்பறை கட்டிடம் குளியலறை, மாற்றுத்திறனாளிக்கென தனி அறையுடனும் சாய்வு தளதத்டனுடன் கட்டுதல் அவசியமாகிறது. எனவே 10–வது தொகுதி நகராட்சி புதிய பள்ளிக்கட்டிட வளாகத்தில் அனைத்து வசதிகளுடன் கூடிய புதிய கழிப்றை கட்டிடம் கட்டிட மதிப்பீடு ரூ.9,90,000/– க்கு தயார் செய்யப்பட்டு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) செலவீனத்தை கல்வி நிதியில் மேற்கொள்ளலாம்.

**தீர்மானம் 52– அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்:53**

தேவகோட்டை நகராட்சிக்குட்பட்ட தியாகிகள் ரோடு ஆர்ச் அருகில் சங்கு ஊதும் இயந்திரம் அமைக்கப்பட்டுள்ளது. பழமை வாய்ந்த இந்த சங்கு ஊதும் இயந்திரமானது நகர்வாழ்

மக்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருந்து வந்தது. தினசரி 3 வேளை ஒலியெழுப்பி பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தி புரதான சின்னமாக திகழ்ந்த இந்த சங்கு ஒலிக்கும் இயந்திரமானது கடந்த சில வருடங்களுக்கு முன் பழுமடைந்து பராமரிப்பு பணி மேற்கொள்ளப்படாமல் இயங்காமல் இருந்து வந்தது. இந்நிலையில் உள்ளாட்சி தேர்தல் முடிந்து தேர்ந்தெடுக்கப்பட்ட நகர்மன்ற உறுப்பினர்கள் ஏகோபித்த குரலாக உடனடியாக. நகருக்கு அடையாளமாக இருந்த இந்த சங்கு ஊதும் இயந்திரத்தினை பழுது நீக்கம் செய்து இயக்க நகர்மன்ற தலைவருக்கு கோரிக்கை விடுத்துள்ளனர். எனவே நகர் மன்ற தலைவரின் ஆணைக்கிணங்க பழுதடைந்துள்ள சங்கு ஒலிக்கும் இயந்திரத்தை பழுதுநீக்கம் செய்யவும் இயந்திரம் அமைக்கப்பட்டுள்ள இரும்பிலான தூண்களில் அரிப்படைந்த தூண்கனை அகற்றி புதிதாக அமைக்கவும் மற்றும் அடிப்பகுதியில் பலப்படுத்த கான்கிரிட் தளம் அமைத்து வர்ணம் பூசுதல் பணி மேற்கொள்ள மதிப்பீடு ரூ.3.00இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:-</u>

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) செலவீனத்தை நகராட்சி பொதுநிதியில் மேற்கொள்ளலாம்.

**<u>தீர்மானம் 53- அனுமதிக்கப்பட்டது.</u>**

<u>பொருள்:54</u>

தேவகோட்டை நகராட்சி தற்போது முதல்நிலை நகராட்சியாக உள்ளது. அதன் பரப்பளவு 12.42 ச.கி.மீ. ஆகும். நகராட்சியில் நகராட்சி சம்பந்தமாக அலுவலக கட்டிடம், பள்ளிக்கட்டிடங்கள், மற்றும் பூங்காக்கள் இயங்கி வருகிறது. அதில் வளரும் தேவையற்ற செடிகள் மற்றும் முட்புதர்கள் போன்றவற்றை வெட்டி அப்புறப்படுத்த வேண்டியுள்ளதால் அதற்கு புல்வெட்டு இயந்திரம் இரண்டு மற்றும் உபகரணங்கள் தேவைப்படுவதால் அதனை வாங்குவதற்கு ஆகும் உத்தேச மதிப்பீடு ரூ.2.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:-</u>

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) செலவீனத்தை கல்வி நிதியில் மேற்கொள்ளலாம்.

**<u>தீர்மானம் 54- அனுமதிக்கப்பட்டது.</u>**

<u>பொருள்:55</u>

தேவகோட்டை நகராட்சிக்குச் சொந்தமான 6வது வார்டு உயர்நிலைப்பள்ளி காந்தி ரோடு பகுதியில் அமைந்துள்ளது. அதில் பயிலும் மாணவர்கள் கணிணி வழி கற்றல் (Smart Class) மூலம் கல்வி பயின்றால் கல்வி திறன் மேம்படும். எனவே மாணவர்கள் நலன் கருதி நகராட்சி பள்ளிகளில் Smart Class வகுப்பு அமைத்து கொடுக்க ஆகும் மதிப்பீடு ரூ.9.90 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:-</u>

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) செலவீனத்தை கல்வி நிதியில் மேற்கொள்ளலாம்.

**<u>தீர்மானம் 55- அனுமதிக்கப்பட்டது.</u>**

<u>பொருள்:56</u>

தேவகோட்டை நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள நகராட்சிக்குச் சொந்தமான பூங்கா இடங்கள் மற்றும் நகராட்சி இடங்கள் திறந்தவெளி இடமாக இருப்பதால் பாதுகாப்பு இல்லாமலும், வெளி நபர்கள் ஆக்கிரமிப்பு ஏற்படும் வகையிலும் உள்ளதால் அந்த இடஙகளில் கல்தூண் மற்றும் முள்வேலி அமைத்து பாதுகாப்பு ஏற்படுத்திக் கொடுக்க ஆகும் மதிப்பீடு ரூ.9,90,000/– இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) செலவீனத்தை பொதுநிதியில் மேற்கொள்ளலாம்.

**<u>தீர்மானம் 56– அனுமதிக்கப்பட்டது.</u>**

**<u>பொருள்:57</u>**

தேவகோட்டை நகராட்சிக்குட்பட்ட இராம்நகர் பகுதியில் நகராட்சிக்குச் சொந்தமான ஆணையாளர் குடியிருப்பு உள்ளது. இக்குடியிருப்பானது இரண்டு அறைகளாக உள்ளது. இந்த இரண்டு அறைகளிலும் ஆணையர் மற்றும் பொறியாளர் ஆகியோர் தங்கியிருந்தனர். பெரும்பாலான ஆணையர் மற்றும் பொறியாளர் வெளியூரை சேர்ந்தவர்களாக இருந்ததாலும் தனி நபர்களாக தங்கியிருந்ததாலும் பராமரிப்பு பணிகள் செய்ய தேவையின்றி இருந்தது. தற்பொழுது புதிதாக பொறுப்பேற்றுள்ள ஆணையர் குடும்பத்துடன் தங்கவேண்டியுள்ளதால் சமையலறை புதிதாக அமைக்கவும், பழைய கட்டிடத்தை பராமரிக்கவும், வாகன நிறுத்தம், பேவர் பிளாக் நடைபாதை, வண்ணம் பூசுதல் மற்றும் இன்னபிற பராமரிப்பு பணிகள் உடனடியாக செய்ய வேண்டியுள்ளது. மேற்காணும் பணிக்கு மதிப்பீடு ரூ.9,00,000/– இலட்சத்திற்க்கு தயார் செய்யப்பட்டு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:–</u>**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) செலவீனத்தை பொதுநிதியில் மேற்கொள்ளலாம்.

**<u>தீர்மானம் 57– அனுமதிக்கப்பட்டது.</u>**

**<u>பொருள்:58</u>**

தேவகோட்டை நகராட்சிக்குட்ப்பட்ட வார்டு எண் – 12ல் சுப்பிரமணியபுரம் புது தெரு உள்ளது. இத்தெரு நகரின் மையப்பகுதியில் உள்ளது. இத்தெருவில் சுமார் 80 வீடுகளுக்கு மேல் உள்ளன. இதில் பெரும்பாலான வீடுகளுக்கு நகராட்சி குடிநீர் இணைப்பு உள்ளது. இத்தெருவிற்கும் இதன் அருகிலுள்ள சுப்பிரமணியபுரம் புது தெரு ஆகிய பகுதிகளில் கடந்த சில மாதங்களாக குடிநீர் சீராக வருவதில்லை. அரசு மருத்துவமனை சாலை அருகிலுள்ள மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியிலிருந்தே இப்பகுதிகளுக்கும் மற்றும் நகரில் பெரும்பாலான பகுதிகளுக்கும் குடிநீர் விநியோகிப்படுகின்றது. மேலும் கடந்த வருடங்களில் இப்பகுதிகளில் அதிக அளவில் புதிய குடிநீர் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. இதன் காரணமாக குடிநீர் விநியோக அளவு குறைந்ததால் இப்பகுதிகளில் குடிநீர் தட்டுப்பாடாக உள்ளது. இப்பகுதியில் புதிதாக ஆழ்துளைக் குழாய் கிணறு அமைத்து பகிர்மான குழாயுடன் இணைத்தால் குடிநீர் சீராக வழங்கலாம். எனவே சுப்பிரமணியபுரம் புது தெரு பகுதியில் புதிய ஆழ்துளைக் குழாய் கிணறு அமைக்க மதிப்பீடு ரூ.8,00,000/– இலட்சத்திற்க்கு தயார் செய்யப்பட்டு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:–</u>**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) செலவீனத்தை குடிநீர் நிதியில் மேற்கொள்ளலாம்.

**தீர்மானம் 58– அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்:59**

தற்போது உள்ள சூழ்நிலையில் கோவிட் 19 பெருந்தொற்று காரணமாக நேரடி ஆய்வுகூட்டங்கள் நடைபெறாத நிலையில் காணொளி காட்சி வாயிலாக நகராட்சி நிர்வாக இயக்குனர், சென்னை, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குனர், மதுரை அவர்களின் ஆய்வுக்கூட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

தற்போது ஆணையர் அறையில் உள்ள ஒரே கணினி மூலம் காணொளி காட்சி ஆய்வுக்கூட்டங்களில் கலந்து கொள்ளும்போது அனைத்து அலுவலர்கள் மற்றும் பணியளார்கள் பதிலளிப்பது சிரமமாக உள்ளது.

எனவே காணொளி காட்சிக்கென UPS மின் இணைப்பு, LAN இணைப்பு, 42" ஆண்ட்ராய்டு தொலைக்காட்சி, வெப் கேமரா, மைக், கணினிகள் உள்ளிட்ட சாதனங்கள் வாங்கி காணொளி காட்சி அமைப்பினை ஆணையர் அறையில் நிறுவலாம். ஆதற்கான உத்தேச செலவு ரூ.4.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | பொருள் | விபரக்குறிப்பு | எண்ணம் |
|---|---|---|---|
| 1 | HP ALL-IN-ONE COMPUTER | 11TH GEN 13 / 8 GB / 1TB / HDD / 22" FHD / SSD SLOT | 3 |
| 2 | TV | 42" ANDROID TV | 1 |
| 3 | WEB CAMERA | SM-LOGITECH BCC950 WEBCAM | 1 |

**அலுவலக குறிப்பு:–**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) செலவீனத்தை பொதுநிதியில் மேற்கொள்ளலாம்.

**தீர்மானம் 59– அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்:60**

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, அறிவிக்கை 2022–2023, அறிவிப்பு எண்.01 மற்றும் கூடுதல் தலைமை செயலர் அவர்களின் கடித ந.க.எண்.10300/எம்ஏ2/2022 , நாள் 01.06.2022, அவர்களின் கடிதத்தின்படி, சுத்தமான, பசுமையான மற்றும் நீடித்த சுற்றுச்சுழலை உறுதி செய்யும் பொருட்டு அனைத்து உள்ளாட்சிகளில் பெரும் அளவிலான மக்கள், தன்னார்வ அமைப்புகள், குடியிருப்போர் நலசங்கங்கள், மக்கள் பிரதிநிதிகள் மற்றும் பள்ளி கல்லுாரி மாணவ, மாணவியர்களின் பங்கேற்புடன் தீவிர துாய்மை பணிகள் மற்றும் விழிப்புணர்வு முகாம்கள் நடத்தி இந்நகர் பகுதிகளில் நகரங்களின் துாய்மைக்கான மக்கள் இயக்கம் நடைமுறைப்படுத்த அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன்படி, தேவகோட்டை பேருந்துநிலையித்தில் தீவிர துாய்மை பணிகள் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் 03.06.2022 நடைபெறவுள்ளதால், இதில் கலந்து கொள்ளும் மாணவ, மாணவியர்கள், சுகாதார பணியாளர்கள், அலுவலக பணியாளர்களுக்கு ஒரே மாதிரியான விழிப்புணர்வு வாசகங்கள் அச்சிடப்பட்ட டி–சார்ட் 250 எண்ணம், தொப்பிகள் 250 எண்ணமும், தேவைப்படுகிறது அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.1,00,000/–க்கு, (ரூபாய் ஒர் லட்சம் மட்டும்) செலவு மேற்கொள்ளவும். பணியின் அவசர அவசியம் கருதி விலைப்புள்ளி பெற்று உடன் பொருட்களை வாங்கி வழங்கவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.738/2022/எச்1.

<u>அலுவலகக்குறிப்பு–</u>

1) அனுமதிக்கலாம்

2)மேற்காணும் செலவினத்தை பொதுநிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்காலம்.

3) பணியின் அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களிடம் 02.06.2022–ல், முன் அனுமதிபெற்றதை மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் 60– அனுமதிக்கப்பட்டது.</u>**

<u>பொருள்:61</u>

தேவகோட்டை நகராட்சி பொது சுகாதார பிரிவின் கீழ் திடக்கழிவு மேலாண்மை திட்டப்பணிகள் மதுரை மீனாட்சி சாலிட் வேஸ்ட் கிளியரிங் ஏஜென்சி என்ற நிறுவனம் மூலம் 115 துாய்மை பணியாளர்களைக்கொண்டு 09.12.2015 முதல் 08.12.2018 வரையிலான காலத்தில் பணி செய்ய உத்தரவிடப்பட்டுள்ளது. அப்போதைய துாய்மை பணியாளர்களின் தினக்கூலி ஊதியம் ரூ.291/– என்ற அடிப்படையில் பணி மேற்கொள்ளப்பட்டது. அதன்பின்னர் பணிக்காலமானது 08.12.2018ல் முடிவடைந்த நிலையில் பொது சுகாதார அவசர அவசியம் கருதி 09.12.2018 முதல் ஒவ்வொரு மூன்று மாத காலம் மன்ற அனுமதியுடன் பணி நீட்டிப்பு செய்யப்பட்டு 31.07.2022 வரையில் பணி செய்யப்பட்டு வருகிறது.

மேலும் இந்நகராட்சி பகுதிகளில் மக்கள்தொகை பெருக்கம் நகர விரிவாக்கம், நுண்ணுர செயலாக்க பணிகள் ஆகியவற்றின் காரணமாகவும், மற்றும் நிரந்த துாய்மை பணியாளர்களின் ஒய்வு போன்றவற்றின் காரணமாகவும் பணிகள் பாதிக்க வண்ணம் பணி மேற்கொள்ள ந.க.எண்.1494/2018/எச்1, நாள் 23.09.2019ன்படி, கூடுதலாக 30 துாய்மை பணியாளர்கள் மதுரை மீனாட்சி சாலிட் வேஸ்ட் கிளியரிங் ஏஜென்சி மூலம் துாய்மை பணிகள் செய்ய ஒப்பந்தம் செய்யப்பட்டு பணியானது 23.03.2019 முதல் 29.09.2020 வரையிலான ஒரு வருட காலத்திற்கு பணி செய்து வரப்பெற்றது. இதில் தினக்கூலி ஊதிய விபரம் ரூ.293/– ஆகும். மேலும் இப்பணியானது பொது சுகாதார அவசியம் கருதி 31.07.2022 வரையில் ஒவ்வொரு மூன்று மாத காலத்திற்கு மன்ற அனுமதி பெறப்பட்டு பணி நடைபெற்று வருகிறது.

இந்நிலையில் தமிழ்நாடு உள்ளாட்சித்துறை பணியாளர்களின் சங்க கடிதத்தில் தெரிவித்துள்ளப்படி, இந்நகராட்சி ஒப்பந்த பணியாளர்களின் 02.05.2022ம், தேதியன்று நகராட்சி அலுவலக முன்பு போராட்டத்தில் ஈடுப்பட்டனர். அதில் தங்களுக்கு கடந்த மூன்று வருடங்களுக்கு மேலாக ஊதிய உயர்வு ஏதும் வழங்கப்படவில்லை எனவும் இதனால் தங்களது வாழ்வாதாரம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன எனவும் கூறப்பட்டது. இருப்பினும் நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் 02.10.2021ன், தேதிய கடிதத்தின்படி, பொது சுகாதாரப் பணிகளுக்கு தமிழகம் முழுவதும் ஒரே மாதிரியான அளவுகளின்படி, பணியாளர்களின் நிர்ணயமும் ஊதிய விகிதம் நிர்ணயம் என்ற அடிப்படையில் ஒப்பந்த துாய்மை பணியாளர்களுக்கான பிரேரணை தயார் செய்து நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அதன்படி நிர்வாக அனுமதி பெறும் வரையில் துாய்மை பணியாளர்களின் வாழ்வாதாரத்தினை கருந்தில் கொண்டு இந்நகரின் பொதுசுகாதாரம் அவசர அவசியம் கருதியும் துாய்மை பணியாளர்களுக்கு பழைய விலைவிகிதத்திலிருந்து 15 சதவிகிதம் ஒரு நபருக்கு ரூ.44 கூடுதலாக வழங்கப்பட்டால் ஒரு பணியாளரின் சம்பளம் ரூ.337/– ( EPF & ESI நீங்கலாக) என்ற விகிதத்தில் இருக்கும் இந்த விலைவிகிதமானது.

பார்வை 3ல் காணும் மாவட்டஆட்சியர் சிவகங்கை அவர்களின் தினக்கூலி அடிப்படையிலான ரூ.506/– என்பதைவிட குறைவாகும். எனவே இத்தினக்கூலி ஊதியத்தை

வழங்கவும் அதற்கான கூடுதல் உத்தேச செலவினம் மாதம் ஒன்றுக்கு ரூ.3,00,000/—த்திற்கு, (மூன்று லட்சம் மட்டும்) செலவு மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
ந.க.எண்.1009/2007/எச்1,

**அலுவலகக்குறிப்பு—**

1)மன்றம் அனுமதிக்கலாம்

2)மேற்காணும் செலவினத்தை நகராட்சி பொதுநிதியில் கீழ் மேற்கொள்ள மன்றம். அனுமதிக்கலாம்.

**தீர்மானம் 61— அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்:62**

தேவகோட்டை நகராட்சி பொது சுகாதாரப் பிரிவின் கீழ் டெங்கு கொசுப்புழு ஒழிப்பு பணிகள், வைரஸ் காய்ச்சல் தடுப்பு பணிகள் மேற்கொள்ள கடந்த 2016ம் ஆண்டு முதல் டெங்கு கொசுப்புழு ஒழிப்பு பணியாளர்களை கொண்டு மாவட்ட ஆட்சியர் அவர்களின் தினக்கூலி விலைவிகிதத்தின்படி, பணி அமர்த்தப்பட்டு பணி செய்து வருகின்றனர்.

2019ம் ஆண்டு முதல் தற்போது வரை டெங்கு கொசு ஒழிப்பு பணியாளர்கள் நாள் ஒன்றிற்கு ரூ.259/— என்ற விலைவிகிதப்படி, பணி செய்து வருகின்றார்கள். இந்நிலையில் பணியாளர்களுக்கான ஊதியம் குறைவினால் மேற்படி, பணியினை மேம்படுத்த முடியாத காரணத்தினால், மாவட்ட ஆட்சியர் அவர்களின் உத்தரவின்படியும், துணை இயக்குநர் சுகாதார பணிகள் அவர்களின் அறிவுறுத்தலின்படியும், டெங்கு கொசுத்தடுப்பு மற்றும் தற்போது தமிழகம் முழுவதும் வேகமாக பரவி வரும் 4வதுஅலை கொரோனா வைரஸ் தடுப்பு பணிகள் முழுமையாக நடைபெறும் நோக்குடனும் இனி வரும் மழைகாலங்களில் பரவும் வைரஸ் காய்ச்சல் மற்றும் நோய்தொற்றுகள் பரவாமல் தடுப்பு பணிகள் மேற்கொள்ளவும் மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை கடித ந.க.எண்.எச்2/11120/2022, நாள் 13.06.2022ன்படி, நிர்ணயம் செய்யப்பட்டுள்ள தினக்கூலி ஊதியத்தின் அடிப்படையில் நாள்ளொன்றுக்கு ரூ.460/— என நிர்ணயம் செய்தும் 45 DCB பணியாளர்களை கொண்டு பணி செய்ய புதிய ஒப்பந்தப்புள்ளி கோரவும் அதற்கான உத்தேச செலவினம் ஒரு வருட காலத்திற்கு ரூ.76,00,000/—க்கு, (ரூபாய் எழுபத்தி ஆறு லட்சம் மட்டும்) செலவு மேற்கொள்ளவும் பணியின் அவசர அவசியம் கருதி உடன் பணி மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
ந.க.எண்.0658/2022/எச்1,

**அலுவலகக்குறிப்பு—**

1)அனுமதிக்கலாம்

2)மேற்காணும் செலவினத்தை பொதுநிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்காலம்.

**தீர்மானம் 62— அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்:63**

தமிழக முழுவதும் கொரோனா வைரஸ் 4வது அலை வேகமாக பரவி வருவதால் இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளிலும் கொரோனா வைரஸ் காய்ச்சலின் தாக்கம் ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் இந்நகர் பகுதிகளில் பொது சுகாதார பணிகள் மேற்கொள்ளும் தூய்மை பணியாளர்களுக்கும், டெங்கு கொசு ஒழிப்பு பணியாளர்களுக்கும் மற்றும் முன்கள பணியாளர்களுக்கும், கொரோனா வைரஸ் காய்ச்சலில் இருந்து பாதுகாத்துக்கொள்ள முன் எச்சரிக்கை நடவடிக்கையாக பணியாளர்களுக்கு முககவசம் வழங்குவது அவசியமாகிறது.

அதன்படி, பணியாளர்களின் நலனை கருத்தில் கொண்டும் பணியின் பொது சுகாதார அவசர அவசியம் கருதி கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கைகளின் முக்கியதுவம்

கருதியும், 20,000 எண்ணம் முக கவசங்கள், அரசு நிர்ணயம் செய்த விலையில் விலைப்புள்ளி பெற்று வாங்கி வழங்கவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.1,00,000/—க்கு, (ரூபாய் ஒரு லட்சம்) செலவு மேற்கொள்ளவும், மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.
ந.க.எண்.705/2020/எச்1.

<u>அலுவலகக்குறிப்பு—</u>

1) அனுமதிக்கலாம்

2)மேற்காணும் செலவினத்தை பொதுநிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் 63— அனுமதிக்கப்பட்டது.</u>**

**<u>பொருள்:64</u>**

தேவகோட்டை நகராட்சிக்கு சொந்தமான கீழ்க்காணும் குத்தகை உரிமையாணைகள் (லைசன்ஸ்) 01.08.2022 முதல் 31.03.2025 முடிய மூன்றாண்டு காலத்திற்கு அனுபவித்துக்கொள்ளும் உரிமைகளை பகிரங்க பொது ஏலம் மற்றும்ஒப்பந்தப்புள்ளிகள் மூன்றாண்டு காலத்திற்கு அனுபவித்துக்கொள்ளும் உரிமைகளை பகிரங்க பொதுஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் மூலம் ஒப்படைக்கவும் ஓராண்டு உரிமையாணைகள் மற்றும் இதர குத்தகை இனங்கள் குறித்த 2022—2025ம், ஆண்டுக்கான ஏல அறிக்கை மற்றும் அவ்வினங்களுக்காக தயாரிக்கப்பட்டுள்ள பொது கட்டுப்பாடுகள் மற்றும் சிறப்பு நிபந்தனைகள் ஒப்புதல் அளிக்கவும், ஏலம் மற்றும் ஒப்புந்தபுள்ளி அறிக்கை மற்றும்பொது கட்டுபாடு விதிகளை வெளியீடு செய்யவும் ஏல அறிக்கை மற்றும் மறு ஏலம்/மறு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்புகளை அவ்வப்போது நாளிதழ்களில் விளம்பரம் செய்யவும், அதற்கான செலவினங்களுக்கும் கீழ்கண்டவாறு நகர்மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>2022—2025ம் ஆண்டுக்கான ஏல அட்டவணை</u>**

| வ. எண் | இனம் என் | உரிமையான விபரம் | காப்புத் தொகை ஒப்பந்தப்புள்ளி வைப்புத்தொகை | சால்வன்சி சான்றிதழ் தொகை | சொத்து பெருமான சான்றிதழ் இல்லையெனில் கூடுதல் காப்புத்தொகை ஒப்பந்தப்புள்ளி வைப்புத்தொகை | ஊரிமை யாணைக்காலம் |
|---|---|---|---|---|---|---|
| 1. | 4 | நகராட்சி சாலைகளில் ஒரங்களில் உள்ள மரங்களின் மேற்பலன்களை மட்டும் அனுபவித்துக்கொள்ளும் உரிமம். | 3,000 | 2000 | 1000 | 01.08.2022 முதல் அல்லது ஒப்படைக்கும் நாள் முதல் 31.03.2025 வரை |
| 2. | 11 | **இராம்நகர் கட்டணக்கழிப்பறை வசூல்** | **1,00,000** | **1,00,000** | **50,000** | 01.08.2022 முதல் அல்லது ஒப்படைக்கும் நாள் முதல் 31.03.2025 வரை |
| 3. | 5 | **நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலையத்திற்கு வரும் பேருந்துகளுக்கு கட்டண வசூல் செய்து கொள்ளும் உரிமம்** | **2,50,000** | **3,00,000** | **2,50,000** | 01.08.2022 முதல் அல்லது ஒப்படைக்கும் நாள் முதல் 31.03.2025 வரை |
| 4. | 6 | கருதாவூரணி | **10000** | **—** | **5000** | 01.08.2022 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | மீன்பிடித்தல் வசூல் உரிமம் | | | | முதல் அல்லது ஒப்படைக்கும் நாள் முதல் 31.03.2025 வரை |

**அலுவலகக்குறிப்பு–**

1) 1 முதல் 4 முடிய உள்ள குத்தகை இனங்கள் 2022ம், ஆண்டு ஆகஸ்டு 2022 முதல் 2025ம், 31 மார்ச் வரை முடிய உள்ள காலம் அல்லது ஒப்படைக்கும் நாளிலிருந்து மூன்று ஆண்டுகளுக்கு மட்டும் உரிமம் காலமாகும். நஷ்டத்தை காரணம் காட்டி பின்வரும் ஆண்டுக்கு தொடர உரிமம் கோர உரிமையில்லை.
2) 2022–2025ம், ஆண்டிற்கு மேலே குறிப்பிட்டுள்ள குத்தகை இனங்கள் மூன்று ஆண்டுகளுக்கும் மட்டும் ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோர அனுமதிக்கலாம்.
3) இக்குத்தகை இனங்கள் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிக்குரிய விளம்பரங்கள் செய்வதற்கும் அதற்குரிய பிற செலவுகளுக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.
4) மேலே குறிப்பிட்ட அனைத்து இனங்களுக்கும் பொது கட்டுப்பாடுகள் மற்றும் சிறப்பு நிபந்தனைகளை அனுமதிக்கலாம்.

**தீர்மானம் 64– அனுமதிக்கப்பட்டது.**

## பொருள்:65

தேவகோட்டை நகராட்சிக்கு சொந்தமான, கடைகளை 01.08.2022 முதல் 31.07.2025 வரையிலான மூன்று ஆண்டு கால தொகுப்பு கொண்ட குத்தகை இனங்கள் மாத வாடகை அடிப்படையில் கீழ்காணும் ஏலம் முன்வைப்புத்தொகை கூடுதல் காப்புத்தொகை, மற்றும் பொதுக்கட்டுபாடு/சிறப்பு நிபந்தனைகளுடன் கீழ் காணும் விபரப்படியான 12 கடைகளுக்கு ஏல/ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு கோர மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**குத்தகைக்கு விடப்படவுள்ள கடைகளின் விபரம்**

| | | |
|---|---|---|
| 1. | புதூர் அக்ரஹாரம் குடிநீர் நீரேற்றி நிலையத்தில் அமைந்துள்ள கடைகள் | கடை எண்.2 |
| 2. | திருப்பத்தூர் ரோடு ஆயுர்வேத மருத்துவமனை கட்டிட கடை | கடை எண்.3 |
| 3. | பேருந்து நிலைய 8கடையில் | கடை எண்.2 |
| 4. | பேருந்து நிலைய 8கடையில் | கடை எண்.3 |
| 5. | பேருந்து நிலைய 8கடையில் | கடை எண்.4 |
| 6. | பேருந்து நிலைய 8கடையில் | கடை எண்.5 |
| 7. | பேருந்து நிலைய 8கடையில் | கடை எண்.6 |
| 8. | தீப்பிடிக்காத கூரைக்கடை | கடை எண்.5 |
| 9. | தீப்பிடிக்காத கூரைக்கடை | கடை எண்.27 |
| 10. | வாடியார்வீதி கடை | கடை எண்.4 |
| 11. | தீப்பிடிக்காத கூரைக்கடை | கடை எண்.11 |
| 12. | ஆயுர்வேத கடை | கடை எண்.7 |

**குத்தகைக்கான ஏலம் முன் வைப்பு மற்றும் கூடுதல் வைப்புத்தொகை விபரம்.**

| வ. எண் | குத்தகை விபரம் | கடை அளவு | எண் ணம் | வைப்புத் தொகை ரூ | சால்வன்சி தொகை ரூ | சால்வன்சி இல்லை எனில் கூடுதல் காப்புத் தொகை ரூ |
|---|---|---|---|---|---|---|

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | **<u>15வது அழைப்பு</u>**<br>புதூர் அக்ரஹாரம் குடிநீர் நீரேற்றி நிலையத்தில் அமைந்துள்ள கடைகள் (கடை எண்.2) | 16 X 8 சதுரஅடி | 1 | 1,00,000/= | 2,00,000/= | 2,00,000/= |
| 2. | **<u>10வது அழைப்பு</u>**<br>திருப்பத்தூர் ரோடு ஆயுர்வேத மருத்துவமனை கட்டிட கடை எண்.3 | 10 X 15 சதுரஅடி | 1 | 1,00,000/= | 2,00,000/= | 2,00,000/= |
| 3. | **<u>4வது அழைப்பு</u>**<br>பேருந்து நிலைய 8கடையில்,, 2ம் நம்பர் கடை | 10 X 15 சதுரஅடி | 1 | 1,00,000 | 2,00,000 | 2,00,000 |
| 4. | **<u>2வது அழைப்பு</u>**<br>பேருந்து நிலைய 8கடையில் 3ம்நம்பர் கடை . | 10 X 15 சதுரஅடி | 1 | 1,00,000 | 2,00,000 | 2,00,000 |
| 5. | **<u>2வது அழைப்பு</u>**<br>பேருந்து நிலைய 8கடையில், 4ம் நம்பர் கடை . | 10 X 15 சதுரஅடி | 1 | 1,00,000 | 2,00,000 | 2,00,000 |
| 6. | **<u>2வது அழைப்பு</u>**<br>பேருந்து நிலைய 8கடையில் 5ம் நம்பர் கடை . | 10 X 15 சதுரஅடி | 1 | 1,00,000 | 2,00,000 | 2,00,000 |
| 7. | **<u>2வது அழைப்பு</u>**<br>பேருந்து நிலைய 8கடையில் 6ம் நம்பர் கடை . | 10 X 15 சதுரஅடி | 1 | 1,00,000 | 2,00,000 | 2,00,000 |
| 8. | **<u>2வது அழைப்பு</u>**<br>தீப்பிடிக்காத கூரைக்கடை கடை எண்.5. | 10 X 15 சதுரஅடி | 1 | 1,00,000 | 2,00,000 | 2,00,000 |
| 9. | **<u>2வது அழைப்பு</u>**<br>தீப்பிடிக்காத கூரைக்கடை கடை எண்.27 | 10 X 15 சதுரஅடி | 1 | 1,00,000 | 2,00,000 | 2,00,000 |
| 10. | **<u>1வது அழைப்பு</u>**<br>வாடியார்வீதி கடை எண்.4 | 10 X 15 சதுரஅடி | 1 | 1,00,000 | 2,00,000 | 2,00,000 |
| 11 | **<u>1வது அழைப்பு</u>**<br>ஆயுர்வேத கடை எண்.7 | 10 X 15 சதுரஅடி | 1 | 1,00,000 | 2,00,000 | 2,00,000 |
| 12. | **<u>1வது அழைப்பு</u>**<br>**தீப்பிடிக்காத கூரை கடை எண்.11** | 10 X 15 சதுரஅடி | 1 | 1,00,000 | 2,00,000 | 2,00,000 |

**<u>குத்தகைதாரர்களுக்கு வழங்கப்படவுள்ள சிறப்பு நிபந்தனைகள்—</u>**

1. குத்தகைக்கு விடப்பட்டுள்ள கட்டிடத்தை சேதப்படுத்தவோ, எவ்வித மாறுதல்கள் செய்யவோ கூடாது.
2. உரிமை காலத்தில் இக்குத்தகை அல்லது உரிமையை வேறு நபருக்கு மாற்றவோ அல்லது உள் வாடகைக்கு விடவோ கூடாது.
3. நகர்மன்ற விரும்பினால் குத்தகை காலத்தின் இடையில் உரிமத்தை ரத்து செய்ய அதிகாரம் உண்டு.
4. அரசு மற்றும் ஆணையாளர் அவ்வப்போது பிறப்பிக்கப்படும் உத்திரவுகளுக்கு உரிமதாரர்கட்டுப்பட வேண்டும்.
5. அரசாணை எண்.147, நாள் 30.12.2000, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையில் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகள் அனைத்தும் இதற்கு பொருந்தும்.
6. உரிம காலத்தில் உரிம இனத்தில் எதிர்பாராமல் ஏற்படும் விபத்து, இழப்பு இயற்கை இடர்பாடு தகராறு பிற காரணங்களினால் ஏதாகிலும் இழப்பு ஏற்பட்டால் நிர்வாகம் பொறுப்பு ஏற்காது. .

7. ஒப்பந்தப் கட்டுப்பாடுகளை மீறி நடந்தால் காப்புத்தொகையை பறிமுதல் செய்யப்படும் உரிமதாரர் அதை மறுக்கவோ நீதிமன்றத்தில் வழக்கு தொடரவோ உரிமை இல்லை.
8. இது சம்பந்தமாக எந்தவிதமாக பிரச்சனைகள் ஏற்படினும் நிர்வாகத்தின் தீர்ப்பே முடிவானது எனவும், அவ்வாறு ஏதேனும் ஒரு காரணத்தால் உரிமம் ரத்து செய்ய நேரிட்டால் நீதிமன்றம் மூலம் நஷ்டஈடு கோரமாட்டேன் என்று கடை உரிமைதாரர் ரூ.100/– மதிப்புள்ள முத்திரைத்தாளில் எழுதிக்கொடுக்க வேண்டும்.
9. ஆணையர் பெயரில் மின்வாரியத்துறைக்கு, குத்தகைதாரரே மின் கட்டணம் செலுத்தி வரவேண்டும்.
10. வைப்புத்தொகை செலுத்தும்போது குத்தகை எடுக்கும் நபரின் புகைப்படம் இணைக்கப்பட வேண்டும்.
11. சொத்துமதிப்புச் சான்றிதழ் 01.01.2022, பின்பு பெறப்பட்டதாக இருக்க வேண்டும்.
12. ஒவ்வொரு இனத்திற்கும் தனிதனியாக காப்புத்தொகை சால்வன்சி தொகை செலுத்தப்படவேண்டும்.
13. ஒரு நபர் ஒரு இனத்திற்கு மட்டுமே ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் கலந்துகொள்ள வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட இனத்திற்கும் கலந்துகொண்டால் ஏற்றுக்கொள்ளப்படமாட்டது.

ஆ) மேற்காணும் குத்தகை கடை இனங்களுக்கு ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரும் விபரம் நாளிதழ்கள் மூலம் விளம்பரம் செய்யவும் அதற்கான செலவினத்தொகையினை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு–</u> மன்றம் அனுமதிக்கலாம்.

## <u>தீர்மானம் 65– அனுமதிக்கப்பட்டது.</u>

## <u>பொருள்:66</u>

தேவகோட்டை நகராட்சிக்கு சொந்தமான, கடைகளுக்கு கடை வாடகை நீண்ட காலமாக செலுத்தாமல் நிலுவையில் உள்ளது. நிலுவையில் உள்ள வாடகை தொகையை குத்தகைதாரர்கள் செலுத்தாததால் நகராட்சியால் பூட்டி சீல் வைக்கப்பபட்டது. அதன் பேரில், கடை உரிமையாளர்களின், சொத்தின் மீது வழக்கு தொடர உத்தேச கட்டணமாக தொகை ரூ.91241/– யினை, கீழ்காணும் விபரப்படி நீதிமன்ற கட்டண தொகையினை செலுத்த மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | பெயர் மற்றும் கடையின் முகவரி | தொகை |
|---|---|---|
| 1. | திரு.ஐ.தன்வீர் ஆசிப்,<br>பேருந்து நிலைய கடை எண்.6, | ரூ.10,72,726/– |
| | நீதிமன்ற கட்டணம் 3 % | ரூ.32,181 /– |
| 2. | திரு.எஸ்.கருணாநிதி,<br>பேருந்து நிலைய கடை எண்.3, | ரூ.6,81,065/– |
| | நீதிமன்ற கட்டணம் 3 % | ரூ.20,431 /– |
| 3. | திரு.சி.சொர்ணக்காளை,<br>பேருந்து நிலைய கடை எண்.4, | ரூ.6,73,923/– |
| | நீதிமன்ற கட்டணம் 3 % | ரூ.20,217 /– |
| 4. | திரு.சூசைமாணிக்கம்,,<br>பேருந்து நிலைய கடை எண்.27, | ரூ.6,13,762/– |
| | நீதிமன்ற கட்டணம் 3 % | ரூ.18,412 /– |

<u>அலுவலகக்குறிப்பு–</u>

1)மன்றம் அனுமதிக்காலம்.

2)மேற்படி கடைகள் நகராட்சி அலுவலகத்தின் மூலம் 04.02.2020 அன்று பூட்டி சீல் வைக்கப்பட்டதன் தொடர்ச்சியாக சம்மந்தப்பட்டவர்களின் மீது வழக்கு தொடர நீதிமன்ற கட்டணத்தினை நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவு மேற்கொள்ள மன்றம் அனுமதிக்காலம்.

## <u>தீர்மானம் 66– அனுமதிக்கப்பட்டது.</u>

## <u>பொருள்–67</u>

தேவகோட்டை நகராட்சிக்கு சொந்தமான 1 முதல் 25 விபரப்படியான கடைகளுக்கு மூன்றாண்டு காலம் கீழ்காணும் விபரப்படி காலம் எண்.4ல், உள்ளவாறு முடிவடைந்து விட்டது. அதன் அடிப்படையில் அரசாணையின் நிலை 92, நாள் 03.07.2007–ன்படி, முதல் மூன்றாண்டு காலம் புதுப்பித்து கடைபுதுப்பிக்கும் நாள் முதல் கீழ்காணும் விபரப்படி காலம் 5ல் உள்ள தேதி முதல் கடை வாடகை காலம் எண்.8ல் உள்ளவாறு கடை வாடகை நிர்ணயம் செய்து பணிமேற்கொள்ள மன்றத்தின் பார்வைக்கு பதிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | வரிவிதிப்பு எண் | உரிமையாளர் பெயர் | கடை உரிமம் முடிவடையும் நாள் | கடை புதுப்பிக்கும் காலம் | கடைவாடகை தொகை மாதம் ஒன்றுக்கு | 15 % சதவிகிதம் உயர்வு செய்யப்படும் கடை வாடகை | மொத்த கடை வாடகை |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 1 | 110/1 | கே.காசிலிங்கம் | 31.12.2021 | 01.01.2022 | 6883 | 1032 | 7915 |
| 2 | 110/16 | பரக்கத்அலி | 31.12.2021 | 01.01.2021 | 4140 | 621 | 4761 |
| 3 | 110/24 | கே.காசிலிங்கம் | 31.03.2021 | 01.04.2021 | 3623 | 543 | 4166 |
| 4 | 110/25 | கே.காசிலிங்கம் | 31.03.2021 | 01.04.2021 | 3594 | 539 | 4133 |
| 5 | 110/26 | கே.காசிலிங்கம் | 31.03.2021 | 01.04.2021 | 7331 | 1100 | 8431 |
| 6 | 110/BDO1/00001 | முகமது மைதீன் | 31.12.2021 | 01.01.2022 | 3565 | 535 | 4100 |
| 7 | 110/BDO1/00006 | ரெமிஷாபேகம் | 31.12.2021 | 01.01.2022 | 3565 | 535 | 4100 |
| 8 | 110/BOD1/00007 | நூர்முகமது | 31.12.2021 | 01.01.2022 | 3565 | 535 | 4100 |
| 9 | 110/BOD1/00008 | எஸ்.அஜிஸ்கான் | 31.12.2021 | 01.01.2022 | 3565 | 535 | 4100 |
| 10 | 110/BOD1/00009 | எம்.முகமது மைதீன் | 31.12.2021 | 01.01.2022 | 3565 | 535 | 4100 |
| 11 | 110/BDO1/00010 | பி.கருப்பையா | 31.12.2021 | 01.01.2022 | 3565 | 535 | 4100 |
| 12 | 110/BD01/00011 | பி.கருப்பையா/பொன்னழகு | 31.12.2021 | 01.01.2022 | 3565 | 535 | 4100 |
| 13 | 110/BD01/00012 | கே.முகமைதீன் அப்துல் காதர் | 31.12.2021 | 01.01.2022 | 3565 | 535 | 4100 |
| 14 | 110/BD01/00045 | செய்யது அகமது | 31.12.2020 | 01.01.2021 | 5200 | 780 | 5980 |
| 15 | 110/BD01/00046 | செய்யது அகமது | 31.12.2020 | 01.01.2021 | 5200 | 780 | 5980 |
| 16 | 110/BD01/00037 | ராஜேஷ்கண்ணா | 30.10.2021 | 01.11.2021 | 7500 | 1125 | 8625 |
| 17 | 110/BD01/00038 | எம்.நடராஜன் | 31.08.2021 | 01.09.2021 | 12301 | 1845 | 14146 |
| 18 | 110/BD01/00042 | கே.வன்மீகநாதன் | 31.08.2021 | 01.09.2021 | 9500 | 1425 | 10925 |
| 19 | 110/BD01/00043 | எஸ்.கணேசன் | 30.11.2021 | 01.12.2021 | 9300 | 1395 | 10695 |
| 20 | 110/BD01/00044 | கே.காசிலிங்கம் | 30.11.2021 | 01.12.2021 | 9400 | 1410 | 10810 |
| 21 | 110/BD01/00048 | கரு.பாலாஜி | 31.11.2021 | 01.12.2021 | 8500 | 1275 | 9775 |
| 22 | 110/BD01/0047 | எம்.விஜயன் | 30.11.2021 | 01.12.2021 | 8200 | 1230 | 9430 |
| 23 | 110/55011 | எம்.சேதுராமன் | 31.03.2022 | 01.04.2022 | 2875 | 431 | 3306 |
| 24 | 110/71010 | ஜபருல்லாகான் | 31.03.2022 | 01.04.2022 | 19550 | 2933 | 22483 |
| 25 | 110/62002 | கே.பெரியண்ணன் சேர்வை | 31.03.2022 | 01.04.2022 | 30475 | 4571 | 35046 |

<u>அலுவலகக்குறிப்பு–</u>

1)மன்றம் அனுமதிக்காலம்.

## <u>தீர்மானம் 67– அனுமதிக்கப்பட்டது.</u>

**பொருள்–68**

தேவகோட்டை நகராட்சி சொத்துவரி சீராய்வு 2022–க்கு, தேவையான சுயமதிப்பீடு படிவங்கள், அச்சிட்டு விநியோகம் செய்ய ஸ்ரீவிநாயகா பிரிண்டர்ஸ், தேவகோட்டை அவர்களுக்கு ந.க.எண்.0238/2022/அ1, நாள் 22.04.2022–ல், வேலை உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. அதன்படி ஸ்ரீவிநாயகா பிரிண்டர்ஸ் தேவகோட்டை அவர்களிடமிருந்து தொகை ரூ.1,14,400/– (ஒரு லட்சத்து பதினான்காயிரத்து நானூறு )–க்கு, பட்டியல் வரப்பட்டுள்ளது. பட்டியல் படி தொகையினை வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு–** மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் 68– அனுமதிக்கப்பட்டது.**

(ஒப்பம்)கா.சுந்தரலிங்கம்

**நகர்மன்ற தலைவர்**

**தேவகோட்டை நகர்மன்றம்**